பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 06 செவ்வாய்க்கிழமை (19.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :144

### நோர்வே அமைச்சர் பீற்றர்ஸன் நேற்று பாலாவுடன் உரையாடல்

# பொதுக்கட்டமைப்பு யோசனைக்கு புதிய திருத்தம் தருகிறது நோர்வே!

## நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடித்து ஒப்பேற்றுமாறு புலிகளிடம் கோரிக்கை

கொழும்பு,ஏப்ரல்19

**ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானத்துக்காக இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் சேர்ந்து உருவாக்கவுள்ள பொதுக்கட்டமைப்பு பற்றிய யோசனைகளுக்குப் புதிய திருத்தம் ஒன்றை நோர்வே சமர்ப்பிக்கின்றது.**

**இவ்விடயத்தில் இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் இணக்கத்துக்குக் கொண்டு வரும் ஒரு முயற்சியாகவே இந்தத் திருத்தம் இப்போது சமர்ப்பிக்கப்படுவதாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் நேற்றுப் பகல் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு தெரிவித்தார்.**

எப்படியாயினும், விட்டுக்கொடுத்து - நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடித்து - பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தைச் சீக்கிரமாக ஒப்பேற்றுமாறு நோர்வே வெளிவிவகார அமைச்சர் இந்த உரையாடலின்போது விடுதலைப் புலிகளை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

லண்டனில் தங்கியுள்ள அன்ரன் பாலசிங்கத்துடன் நேற்றுத் தொலைபேசியில் விரிவாக உரையாடிய நோர்வே வெளிவிவகார அமைச்சர், நேற்றுமாலை ஜெனீவாவில் தங்கியிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனும் தொலைபேசியில் உரையாடவிருந்தார்.

பொதுக்கட்டமைப்புக்கான இணக்கத்தை ஏற்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## யாழ். - முகமாலை மினிபஸ்கள் நேற்றும் ஓடவில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.19

முகமாலை ஏ-9 வீதியூடான தனியார் போக்குவரத்துச் சேவைகள் நேற்று இரண்டாவது நாளாகவும் ஸ்தம்பிதமடைந்தன.

கடந்த சனிக்கிழமை இருபாலையில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் சம்பந்தப்பட்ட மினிபஸ் எரிக்கப்பட்டது. அந்த மினிபஸ் யாழ்.- முகமாலை இடையே சேவையிலீடுபட்டிருந்தது. இந்த பஸ் எரிப்பைக் கண்டித்து தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் யாழ்.முகமாலையூடான தனியார் பொதுப் போக்குவரத்துச் சேவையை நிறுத்தி பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இந்த பகிஷ்கரிப்பு நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது. இதனால் யாழ்.- முக மாலை ஊடாகச் சென்ற வடபிராந் திய போக்குவத்துச்சபை பஸ்களில் சன நெரிசல் அதிகமாக இருந்தது. (ஒ-13-117)

## கதிர்காமர் மற்றும் தனபாலவுடன் நேற்று சொல்ஹெய்ம் தனித்தனியாக ஆலோசனை

கொழும்பு.ஏப்.19

இலங்கை வந்திருக்கும் நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நேற்றுக் கொழும்பில், அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைத் தனித்தனியே சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்றுக் காலை அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவைச் சந்தித்தபோது விரைவில் உருவாக்க முயற்சிக்கப்படும் பொதுக் கட்டமைப்புக்குறித்து கருத்துப் பரிமாற்றங்களைச் செய்த எரிக் சொல்ஹெய்ம், இந்த மாத இறுதியில் இந்த முயற்சியில் முன்னேற்றம் ஏற்படலாமென்று நம்பிக்கை வெளி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழர் தாயகத்தில் இன்று அன்னைபூபதி நினைவு தினம்

யாழ்ப்பாணம். ஏப். 19

தியாக தீபம் அன்னை பூபதியின் 17ஆவது நினைவு நாள் குடாநாடு உட்படத் தமிழர் தாயகம் எங்கிலும் இன்று எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகிறது. குடாநாட்டின் விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் மற்றும் பொது இடங்களில் அன்னை பூபதியின் திருவுருவப்படம் வைத்து மஞ்சள், சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

தேசிய எழுச்சிப்பேரவையின் ஊரக, பிரதேச, கோட்ட, மாவட்ட கிளைகளின் ஏற்பாட்டில் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு எழுச்சிக் கீதங்கள் இசைக்கப்படுகின்றன. எழுச்சி நிகழ்ச்சிகளும், சிரமதானப் பணிகளும் முன்னெடுக்கப்பட உள்ளன. அடையாள உண்ணாவிரத நிகழ்வு கோட்ட ரீதியாக இன்று காலை 9 மணிமுதல் 2 மணி வரை இடம்பெறவிருக்கிறது.

வலிகாமம், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கோட்டங்களுக்கு நல்லூர் முத்திரைச் சந்தையடியில் உள்ள கேணல் கிட்டு நினைவுப் பூங்காவிலும் தீவகக் (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ்ச்செல்வன் - சொல்ஹெய்ம் நாளை கட்டுநாயக்கவில் பேச்சு

கொழும்பு.ஏப்.19

ஐரோப்பிய நாடுகளிலும் தென்னாபிரிக்காவிலும் ஐந்து வாரகால விஜயத்தை மேற்கொண்டிருந்த - அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழு உறுப்பினர்கள் நாளை நாடு திரும்புகின்றனர். நாளை காலை 2.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தைத் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் வந்தடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றிரவு சூரிச்சிலிருந்து புறப்படும் அவர்கள், நாளை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்ததும் அங்கிருந்து விமான நிலையத்தை ஒட்டிய ஹோட்டல் ஒன்றுக்குக் கூட்டிச்செல்லப்பட்டுத் தங்கவைக் கப்படுவர்.

அன்று காலை உணவை முடித்ததும்,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## நோர்வேத் தூதரகக் குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்

யாழ்ப்பாணம்,ஏப்.19

நோர்வேத் தூதரக அதிகாரிகள் குழு நேற்று யாழ்ப்பாணம் வந்தது.

யாழ்ப்பாணத்துக்கு வந்த நோர்வேத் தூதரக அதிகாரிகள் குழு யாழ்செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஸுடன் சந்திப்பொன்றை நடத்தியது.

சந்திப்பு முடிவடைந்ததும் செய்தியாளர்களைச சந்தித்தபோது ரி.குப்பெருட் தெரிவித்ததாவது:-

நோர்வேயின் நிதியுதவியுடன் 2002 ஆம் ஆண்டில் யாழ். குடாநாட்டில் குடிதண்ணீர் வழங்கல் மற்றும் சூழல் பாதுகாப்பு தொடர்பான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அத் திட்டங்களைப் பார்வையிடவும் அவற்றின் முன்னேற்றங்களை அறியவுமே குடாநாட்டிற்கு வந்தோம். இத்திட்டம் நேரடியாக அரசு ஊடாகவே செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டங்களே தற்போது செயற்படுத்தப்படும். ஏனைய திட்டங்கள் பற்றி இப்பொழுது எவ்வித தீர்மானங்களும் இல்லை.

நோர்வே அரசு சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக்காக அரச, அரசசார்பற்ற நிறுவனங்களூடாக நிதியுதவியையும் வழங்கியுள்ளது - என்றார்.

நோர்வே நாட்டுத் தூதரக அதிகாரிகள் கொண்ட இக்குழு, இன்று பருத்தித்துறை, மருதங்கேணி போன்ற சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் நோர்வேயின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட படகு கட்டும் நிலையங்களையும் பார்வையிடும். (ஒ-202-204)

*(மேலும் செய்திகள் 2 ஆம் பக்கத்தில்)*

## அரசியல் கட்சிகளைச் சாராதோரே மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களாவர்

### ஆணைக்குழுத் தலைவர் உதயனுக்குத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள மத்தியஸ்தர் சபைகளில் அரசியல் கட்சிகளைச் சாராதவர்களே உறுப்பினர்களாக இருக்க முடியும்.

மத்தியஸ்தர் சபையின் ஆணைக்குழுத் தலைவர் டி.ஜெயவிக்கிரம இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசரான இவர், மத்தியஸ்தர் சபைகளை யாழ்ப்பாணத்தில் அமைக்கும் பணிகளை முன்னெடுக்க இங்கு வந்துள்ளார்.

மத்தியஸ்தர் சபைகள் குறித்து அவர் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் பத்து மத்தியஸ்தர் சபைகளை அமைக்க முடிவு செய்துள்ளோம். இவற்றில் யாழ்ப்பாணம், வேலணை, ஊர்காவற்றுறை, சங்கானை, நல்லூர் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் முதலில் சபைகள் அமைக்கப்படவிருக்கின்றன. இச்சபைகளுக்கான உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக நேர்முகப் பரீட்சைகளை நேற்று ஆரம்பித்துள்ளோம்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் சனத்தொகைக்கு ஏற்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 முதல் 30 வரை இருக்கும். இச்சபையின் தலைவராக ஒருவர் இருப்பார். அவருடன் சேர்ந்து இரு உறுப்பினர்கள் இணைந்த குழு, கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக பேச்சு மூலம் இணக்கத்தை ஏற்படுத்த முயற்சி எடுக்கும்.

உள்ளூரில் ஏற்படும் சாதாரண பிணக்குகள் நீதிமன்றத்துக்குச் செல்வதைத் தவிர்ப்பதற்காகவே இந்தச் சபைகள் அமைக்கப்படுகின்றன. முறைப்பாட்டில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் இணக்கத்துக்குக் கொண்டு வருவதே இச்சபைகளின் பிரதான நோக்கமாக இருக்கும்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### உள்ளே கல்விச்சுடர்

5 ஆம் தர புலமைப் பரிசில் மாணவர்களுக்கான கல்விச்சுடர் இலவச இணைப்பிதழ் இன்றைய உதயனுடன் வெளியாகின்றது.

## புலிகளின் காவலரண் மீது மூதூரில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு.ஏப்.19

திருகோணமலை மாவட்டம் மூதூர் பச்சனூர் பகுதியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் காவலரண் மீது நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இராணுவச் சீருடையணிந்த 20 இற்கும் மேற்பட்டவர்கள் காவலரணை நோக்கிச் சுட்டனர் எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது போராளிகளுக்கோ காவலரணுக்கோ சேதம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



சுற்றுச்சூழல் [illegible]காமைத்துவ அலுவலகத் திறப்பு விழாவின் [illegible]ரம்பத்தில் இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் ஆலோசகர் ரீ.குப் பெருட் மங்கள விளக்கேற்றுவதையும் -

நிகழ்வில் புனர்வாழ்வு அமைச்சு அபிவிருத்தி மேலதிகச் செயலாளர் ரீ.குமாரதாசன், நோர்வேத் தூதரக ஆலோசகர் ரீ.குப் பெருட், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் நோர்வே தூதரகத்தின் இலங்கைக்கான மேலதிக ஆலோசகர் எல்.விஜயநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் -

திறந்து வைக்கப்பட்ட அலுவலகத்தையும் படங்களில் காணலாம். *(படங்கள்:பிரபா)*

# சுற்றுச் சூழல் அலுவலகம் நேற்றுத் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ் மாநகர சபையின் பழைய அமைவிடத்துக்கு அருகில் நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட சுற்றுச் சூழல் முகாமைத்துவப் பிரிவு அலுவலகத்தை நேற்று இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்தின் ஆலோசகர் ரி.குப்பெருட் திறந்து வைத்தார்.

இத்திறப்பு விழா நேற்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது.

இதில் ஆரம்ப நிகழ்வாக மங்கள விளக்கினை நோர்வேத் தூதரகத்தின் ஆலோசகர் ரி.குப்பெருட் ஏற்றிவைத்தார்.

அதன் பின்னர் நோர்வேத் தூதரகத்தின் ஆலோசகர் ரி.குப்பெருட் நாடாவை வெட்டி அலுவலகத்தினைத் திறந்துவைத்தார். தலைமையுரையை யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசாவும் சிறப்புரைகளை யாழ் அரச அதிபர் கே.கணேஷ், பிரதம விருந்தினர் ரி.குப்பெருட் ஆகியோரும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிகச் செயலாளர் ரி.குமாரதாசன், நோர்வே தூதரகத்தின் இலங்கைக்கான மேலதிக ஆலோசகர் எஸ்.விஜயநாதன், ஐ.நாவின் மனித மீள்குடியமர்வு அபிவிருத்தித் திட்டத்தின் யாழ். நகரப் பணிப்பாளர் சி.வி.கே. சிவஞானம் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். இக் கட்டடப் பகுதியில் சுற்றுச்சூழல், திண்மக்கழிவு முகாமைத்துவம், நகர அபிவிருத்தி ஆகியவற்றுக்கான மூன்று பிரிவுகள் இயங்கவுள்ளன.

(ஒ-7)

# சைக்கிளில் சமாந்தரமாக சென்றவர்கள் பிடிபட்டனர்

யாழ்ப்பாணம்.ஏப்.19

யாழ்.நகரப்பகுதியில் சைக்கிள்களில் சமாந்தரப் பயணம் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் நேற்று 12 பேரை யாழ்.பொலீஸார் பிடித்தனர்.

இவர்களில் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் அடங்கியிருந்தனர். இவர்களை யாழ்.நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி. விக்னராஜாவிடம் பொலீஸார் முன்னிலைப் படுத்தினர்.

அப்போது பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு தலா 500 ரூபாவை அரசு செலவாகச் செலுத்தும்படி அவர்களுக்கு நீதிவான் உத்தரவிட்டார். மற்றவர்களுக்கு 500 ரூபா அபராதம் விதித்து நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை -

யாழ்.நகரப் பகுதியில் உள்ள ஒரு வழிப் பாதை ஒழுங்கை மீறிய குற்றச்சாட்டின் பேரில் நேற்று 9 வாகனச் சாரதிகள் யாழ்.பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் மின்பஸ் மற்றும் லொறிச் சாரதிகளும் அடங்கியிருந்தனர். இவர்களை யாழ்.நீதிமன்றத்தில் பொலீஸார் ஆஜர் செய்தனர்.

அவர்களை ஆயிரம் ரூபா தண்டப் பணமும், ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செனுத்தும்படி நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார். (ஒ-3)

## மணல் ஏற்ற அனுமதி

தென்மராட்சி,ஏப்.19

தென்மராட்சிப் பிரசேத்தில் கட்டட வேலை மேற்கொள்ளும் பொதுமக்களுக்கு பிரதேச செயலகத்தினால் மணல் வாகனங்களில் ஏற்று வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது.

தென்மராட்சி கிழக்கு கெற்பேலிப் பகுதியில் வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாள்களில மணல் ஏற்றுவதற்கு இந்த அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுவருகிறது.

மணல் தேவைப்படும் தென்மராட்சிப் பிரதேச மக்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரின் சிபார்சுடன் பிரதேச செயலகத்தில் படிவத்தினைப்பெற்று மணலுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

# நிரந்தர சமாதானம் ஏற்பட்டாலேயே வெளிநாட்டு உதவிகளால் பயன்கிட்டும்

## நோர்வேத் தூதரக ஆலோசகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.19

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டாலேயே வெளிநாட்டு உதவிகளால் முழுப் பயன் கிட்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் நோர்வே தூதரக ஆலோசகர் ரி. குப்பெருட். நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் மாநகர சபையின் பழைய அமைவிடத்தில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச் சூழல் முகாமைத்துவ அலுவலகம் நேற்றுப் பிற்பகல் திறந்துவைக்கப்பட்டது.

இத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 27 வருட காலமாக இலங்கையில் பல்வேறு திட்டங்களை நோர்வே செயற்படுத்தி வருகின்றது. ஆனால், வடக்கு - கிழக்குப் பகுதியில் நிலவிய யுத்தச்சூழ்நிலை காரணமாக எத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு மாதகாலத்துக்குள்ளேயே குடாநாட்டில் அபிவிருத்திப் பணிகளை நோர்வே ஆரம்பித்தது.

குடாநாட்டு அபிவிருத்தி தொடர்பாக புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் அதிகாரிகளுடன் நாம் (நோர்வே அதிகாரிகள்) கலந்துரையாடினோம். அதன் பெறுபேறாக யாழ். மாநகர சபையுடன் இணைந்து இரு திட்டங்களை நடைமுறைப்படுத்த இணங்கினோம்.

அதன்படி, மாநகர சபைப் பகுதிச் சூழல் பாதுகாப்பு மற்றும் குடிதண்ணீர் விநியோகம் ஆகிய திட்டங்கள் தற்சமயம் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

இலங்கையில் வடக்கு - கிழக்கு மீள் கட்டுமானத்துக்குப் பல நாடுகள் பெருமளவு நிதியை வழங்கின. அப்போது நோர்வேயும் 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியது. இந்த நிதி இதுவரை பயன்படுத்த முடியாத - தேங்கிய நிலையிலேயே - உள்ளது.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களில் இணக்கம் ஏற்பட்டு ஒரு நிரந்தரத்தீர்வு கிட்டும்போதே இந்த நிதியால் பயன்கிடைக்கும்.

இந்த நிதி மட்டுமல்ல வெளிநாடுகள் வழங்கிய நிதி உதவிகள் பலவும் பயன்படுத்தப்பட்டு வடக்கு - கிழக்கு மீள்கட்டுமானம் ஆரம்பிக்கப்படும் நிலை அப்போதுதான் உருவாகும்.

நிரந்தரத் தீர்வு ஒன்று எட்டப்படும் போது வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு இந்த நிதிகளால் பூரணமாகப் பயன் கிடைக்கும் என்று நம்புகிறோம். சமாதான முயற்சிகள் வெற்றி பெற்றால் யாழ்ப்பாணத்துக்குக் கூடுதலான நிதியை நோர்வே வழங்கும் - என்றார். (ஒ-7)

## கிறிஸ்ரினா ரொக்கா இன்று வருகின்றார்

தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் இராஜாங்கப் பிரதி அமைச்சர் கிறிஸ்ரினா ரொக்கா இன்று இலங்கை வரவுள்ளார்.

கட்டுநாயக்க விமானநிலையத்தில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவரை வரவேற்பார். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்திற்கு அவர் இன்று விஜயம் செய்வார்.

கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமா மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை ரொக்கா நாளை சந்திக்கவுள்ளார். (க)

# யாழ். ஆஸ்பத்திரியில் 2 தினங்கள் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ்.போதனா வைத்தியாலையில் இன்றும நாளையும் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சத்திர சிகிச்சை நிபுணர்களால் இரு தினங்களும் விசேட பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இச்சிகிச்சையில் பங்கு பற்ற விரும்பும் நோயாளர்கள் இன்று சத்திரசிகிச்சை 'கிளினிக்'கில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும் சத்திர சிகிச்சை செய்வதற்குத் தயாராக வருகை தருமாறும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஐ-202)

# மில்லர் பூங்காவில் ஷெல்கள் மீட்பு!

கரவெட்டி,ஏப்.19



மீட்கப்பட்ட ஷெல்கள்

நெல்லியடி மில்லர் பூங்காவில் வெடிக்காத நிலையில் நான்கு ஷெல்கள் நேற்று மீட்கப்பட்டன.

பூங்காவில் உள்ள மில்லரின் சிலையின் பின்புறம மேற்குப் பக்கமாக சுமார் 10 யார் தூரத்தில் இராணுவத்தினர் பயன்படுத்தும் தண்ணீர் புகாத சீருடை ஒன்றால் சுற்றப்பட்டு, இந்த ஷெல்கள் புதையுண்டிருந்தன. அன்னை பூபதி நினைவு நாளையொட்டி நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட சிரமதானத்தின்போது துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் நிலத்தை மண்வெட்டியால் வெட்டினர். அப்போது மேற்படி சீருடையின் ஒரு பகுதி மண்வெட்டியில் சிக்கியது. அதைத் தொடர்ந்து மண்ணை அகற்றியபோது ஷெல்களின் ஒரு பாகம் வெளியே தெரிந்தது.

இதனையடுத்து வடமராட்சி அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் இன்பனுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கு அறிவித்தார். நேற்றுகாலை 10.45 மணியளவில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் வந்து ஷெல்களைச் செயலிழக்கச் செய்து அப்புறப்படுத்தினர்.

இந்தச் ஷெல்கள் குறுந்தூரம் பாயக்கூடியவை என்றும் - தரையில் வைத்து இயக்கக் கூடியவை எனவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-70)

# வீதி விபத்துக்களில் மூவர் காயம்!

தென்மராட்சி,ஏப்.19

வீதி விபத்துக்களில் சிக்கிக் காயமடைந்த மூவர் நேற்று சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

வீதியில் இருந்த பள்ளத்தில் மோட்டார் சைக்கிளின் சக்கரம் இறங்கியதால் தூக்கி வீசப்பட்ட சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த நவரத்தினம் குணசிங்கம் (வயது 36) என்பவரும் -

வீதியின் குறுக்கே ஓடிய நாய்மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் தூக்கி வீசப்பட்ட வரணியைச் சேர்ந்த பொ.விஜயதர்மன் (வயது 27) என்பவரும் -

சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்த கெற்பேலியைச்சேர்ந்த இராமநாதன் மணி (வயது 54) என்பவருமே காயமடைந்தவர்களாவர்.

இவர்களில் இராமநாதன் மணி என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(ஒ-117)

# கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு மே முதல் விசேட கொடுப்பனவு!

எதிர்வரும் மே மாதத்திலிருந்து கூடுதல் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசியர்களுக்கு 2,500 ரூபாவையும், கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு 1,500 ரூபாவையும் மாதாந்த மேலதிகக் கொடுப்பனவாக வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

கூடுதல் கஷ்டப் பிரதேச மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக இவ்வாறான கொடுப்பனவை கடந்த ஜனவரி முதல் வழங்க அரசு தீர்மானித்திருந்தது. ஆனாலும், கூடுதல் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள், கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் போன்றவற்றை மாகாணசபைகள் அறிவிபதில் ஏற்பட்டிருந்த தாமதத்தினால் இந்த முடிவை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

ஏற்கனவே பாடசாலைகளைத் தரம் பிரிப்பது சம்பந்தமாக சுற்றறிக்கையொன்றை கல்வியமைச்சு மாகாண சபைகளுக்கு வழங்கியுள்ளது. இதன் பிரகாரம் அடுத்த மாதம் 12ஆம் திகதிக்குள் இந்த விவரங்களைச் சம்பந்தப்பட்ட மாகாண சபைகள் அரச நிதி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கவேண்டும்.

ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டிய மாதாந்த மேலதிகக் கொடுப்பனவிற்கான நிதியை ஏற்கனவே திறைசேரி ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ்.மாவட்டத்தில் ஊனமடைந்தவர்களுக்கு உதவும் நோக்குடன் 60 சக்கர நாற்காலிகளையும், 200 ஊன்று கோல்களையும் தாய்லாந்து அரசு யாழ்.செயலகத்துக்கு வழங்கியுள்ளது.

ஊனமடைந்தவர்களில் சக்கர நாற்காலி அல்லது ஊன்றுகோல் தேவைப்படுவோர் கிராம சேவையாளரின் சிபார்சுடன் பிரதேச செயலகம் ஊடாக யாழ்.செயலகப் புனர்வாழ்வுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-8)

# புத்தாண்டையொட்டி நடைபெற்ற மாட்டு வண்டிச் சவாரி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.19

சித்திரைப் புத்தாண்டையொட்டி சக்தி எவ்எம், சக்தி ரி.வி. கடந்த ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி சவாரித் திடலில் நடத்திய மாட்டு வண்டிச் சவாரி முடிவுகள் வெளியாகியுள்ளன.

மூன்று பிரிவுகளாக நடைபெற்ற இந்தப் போட்டி முடிவுகள் வருமாறு:

'ஏ' பிரிவு

முதலாம் இடம் - ம.றெக்ஸ் நியூட்டன் (இளவாலை), இரண்டாம் இடம் - க.செல்வரட்ணம் (அச்செழு), மூன்றாம் இடம் - குமரன் (வட்டுக்கோட்டை).

'பி' பிரிவு

முதலாம் இடம் - தி.அருணாசலம் (நவிண்டிஸ்), இரண்டாம் இடம் - ம.ஆனந்தராசா (பிரான்பற்று), மூன்றாம் இடம் - கு.தாஸன் (புத்தூர்), நான்காம் இடம் - க.பார்த்தீபன் (கரவெட்டி)

'சி' பிரிவு

முதலாம் இடம் - நா.லிங்கம் (தோப்பு), இரண்டாம் இடம் த.நிசாந்தன் (வட்டுக் கோட்டை), மூன்றாம் இடம் - புகணபதிப்பிள்ளை (அளவெட்டி), நான்காம் இடம் - க.தவராசா (வட்டுக்கோட்டை).

(8)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.19

பட்டதாரி பயிலுநர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் சில தீர்மானங்களை எடுக்க வேண்டியிருப்பதால் சகல பட்டதாரிப் பயிலுநர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு இணைப்பாளர் இரா.அகிலன் கேட்டுள்ளார். (த)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# நின்று கொல்லும் சர்வதேச நியதி இது

இலங்கை அரசுக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் தரும் பலமான அடி ஒன்றை கனடா நாடு வழங்கியிருக்கிறது.

கனடாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்ட இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும் ஜனாதிபதியின் பாதுகாப்புத்துறை ஆலோசகருமான சந்திரானந்த டி சில்வாவின் நியமனத்தை ஏற்கமறுத்து நிராகரித்ததன் மூலம் இலங்கை அரசுக்கும் அரச நிர்வாகத்துக்கும் வலுவான செய்தி ஒன்றை உறைக்கும் விதத்தில் கனடா தெரிவித்திருக்கின்றது.

சந்திரானந்த டி சில்வா பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பதவிவகித்த காலத்தில் இடம்பெற்ற படையினரின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பல குற்றச்சாட்டுகளுக்கு அவரே பொறுப்பு என நிரூபிக்கப்படாவிட்டாலும், குற்றச்சாட்டுகள் இருப்பதே இதற்கான காரணமென்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சு இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஏதோ அரச படைகள் இழைத்த மனித உரிமை மீறல்களுக்குச் சிவில் அதிகாரி மீது குற்றம் சுமத்தப்பட்டிருப்பது போலவும் தாம் செய்யாத தவறுக்காக அப்பழுக்கற்ற ஓர் அதிகாரி கனடா அரசினால் கண்டிக்கப்படுகின்ற மாதிரியும் இவ்விடயத்தில் செய்திகள், விவரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இதேபோன்று, முன்னாள் இராணுவத் தளபதி திஸ்ஸ வீரதுங்கவிற்கு வழங்கப்பட்ட தூதுவர் நியமனத்தை, கனடா ஆரம்பத்தில் நிராகரித்தாலும், பின்னர் ஏற்றுக்கொண்டது. ஓர் இராணுவத் தளபதி விடயத்திலேயே விட்டுக்கொடுத்த கனடா ஒரு சிவில் அதிகாரி விடயத்தில் மட்டும் பெரிய பிகு பண்ணுவது ஏன் என்றும் கேள்வி எழுகின்றது.

இராணுவத் தளபதி திஸ்ஸ வீரதுங்கவுக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் நீதிமன்றம் எதிலும் நிரூபிக்கப்படவில்லை. அதேபோன்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவுக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. ஆகவே, இராணுவத் தளபதியான திஸ்ஸ வீரதுங்க விடயத்தில் நடந்துகொண்டதுபோல சிவில் அதிகாரியான சந்திரானந்த டி சில்வா விடயத்திலும் கனடா அரசு விட்டுக்கொடுப்போடு நடந்துகொள்ளவேண்டும் என்ற ஒரு வாதம் முன்வைக்கப்படலாம்.

ஆனால், கனடா அப்படி நடந்துகொள்ளுமானால் அது முழு அளவில் தப்பாகும்.

சந்திரானந்த டி சில்வா விடயத்தில் அவருக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் எந்த நீதிமன்றத்திலும் நிரூபிக்கப்படாத நிலையிலும் அவர் குற்றங்களுக்குப் பொறுப்பு ஏற்க வேண்டியவராகின்றார். அவரே குற்றவாளி என்பதுதான் தமிழர் தரப்பு வாதம்.

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை 80களின் முற்பகுதியில் நிரந்தரச் சட்டமாக்க அப்போதைய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசு முயற்சித்தபோது, அந்தத் திருத்தச் சட்டத்தின் நகலில் பல அதிகாரங்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்தன. பயங்கரவாதச் சட்டத்தின் கீழான சந்தேக நபர்களை நீண்ட காலத்துக்குத் தடுத்து வைத்திருப்பதற்கான உத்தரவை வழங்குதல், அந்தக் கைதிகள் எங்கு, எப்படி, எத்தகைய விதிமுறைகளுக்கு அமையத் தடுத்து வைத்திருக்கப்பட வேண்டும் என்பன பற்றிய பணிப்புரைகளை விடுத்தல் போன்ற அதிகாரங்கள் எல்லாம் பாதுகாப்பு அமைச்சருக்குரியவை என அச்சட்டமூலம் தெரிவித்தது. ஆனால், அதை உயர் நீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது. அரசியல்வாதியான அமைச்சர் ஒருவரிடம் அத்தகைய பொறுப்புகளை வழங்குவது துஷ்பிரயோகத்துக்கு வழி கோலலாம் என உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியதை அடுத்து, அப்பொறுப்புகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான சிவில் அதிகாரியிடம் சட்ட ரீதியாக ஒப்படைக்கப்பட்டன.

அத்தகைய பொறுப்பை இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான சந்திரானந்த டி சில்வா உரிய முறையில் நிறைவேற்றினாரா? அல்லது படை உயரதிகாரிகளின் வெறும் 'றப்பர் ஸ்டாம்ப்' ஆக இருந்து மனித உரிமை மீறல்களுக்குத் துணை போனாரா என்பதுதான் கேள்வி.

முன்னைய சந்திரிகா அரசில் - சந்திரானந்த டி சில்வா பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராக இருந்தபோது - அரச படைகளினால் கைதுசெய்யப்பட்டு, சந்திரானந்த டி சில்வாவின் தடுப்புக்காவல் உத்தரவுகளின் பேரில் பல ஆண்டுகளாக சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டிருந்த பல நூற்றுக்கணக்கானோரின் நிலைமை என்ன?

அரசு மாறிய பின்னர், இலங்கை நீதிமன்றங்களினால் வழக்குமின்றி, குற்றப்பத்திரம்கூடத் தாக்கல் செய்யப்படாமல் எழுநூறுக்கும் அதிகமானோர் விடுவிக்கப்பட்டுள்ளனரே? இந்த எழுநூறுக்கும் அதிகமானோரை நீண்ட பல வருடங்கள் தடுப்பு முகாம்களிலும் சிறைகளிலும் தடுத்து வைத்திருப்பதற்கான உத்தரவுகளில் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்திட்ட சிவில் அதிகாரிகளை, மனித உரிமைகளை மீறாத சுத்தவாளிகள் என்றோ - கனடா போன்ற நாட்டின் தூதுவராக நியமனம் பெறக்கூடிய கௌரவமுடையவர்கள் என்றோ - மனித உரிமை விடயங்களில் அதிக சிரத்தை காட்டும் கனடா போன்ற நாடுகள் கருதவேண்டும் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது?

சந்திரானந்த டி சில்வாவின் உத்தரவின் கீழ் சிறைகளில் நீண்ட பல வருடங்கள் வாடிய பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் குற்றம் அற்றவர்கள் - குற்றம் செய்யாதவர்கள் - என்று கருதி இலங்கை நீதிமன்றங்களினால் விடுவிக்கப்பட்டமையே சந்திரானந்த டி சில்வாவுக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றங்களை நிரூபிக்கப் போதுமானதாகும்.

# விபத்துக்களைத் தடுக்க மக்களிடமிருந்து ஆலோசனை கோருகின்றது செயலகம்

யாழ்ப்பாணம்,ஏப்.19

குடாநாட்டில் இடம்பெறுகின்ற வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பாக மக்களின் ஆலோசனையைப் பெறும் பொருட்டு யாழ்.செயலகம் விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றில் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது. இதனைத் தடுத்து நிறுத்துவது எவ்வாறு? இதற்கான வழிவகைகளைக் கண்டறிவது எப்படி? என்பது குறித்து பொதுமக்களின் ஆலோசனையைப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விபத்துக்களை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றி மக்கள் தமது சுயமான ஆலோசனைகளை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் 'அரச அதிபர், யாழ். மாவட்டச் செயலகம்' எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால்மூலமோ அனுப்பி வைக்கலாம்.

ஆலோசனைக் கடிதங்கள் பரிசீலனை செய்யப்படும். பின்னர் 26ஆம் திகதி யாழ்.செயலகத்தில் வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இதில் பத்திரிகையாளர்கள் பலாலி இராணுவமுகாம் படைத்தளபதி, யாழ். போக்குவரத்துப் பொலீஸார் மற்றும் யாழ். மாவட்ட அரசியல்துறையினர், நிர்வாகத் துறையினர் எனப்பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் பொதுமக்களின் ஆலோசனைக் கடிதங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களது கருத்துகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

- இவ்வாறு பத்மநாதன் தெரிவித்தார். (ஜ-13)

# கச்சாயில் பெரும் கோஷ்டி மோதல்: பலருக்குக் காயம்; அங்கு பதற்றம்!

கொடிகாமம்,ஏப்.19

புதுவருட தினத்தன்று இரவு கச்சாய் தெற்கு கண்ணகை அம்மன் ஆலயத்தில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை, இரு பகுதி இளைஞர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தகராறு பெரும் மோதலாக வெடித்தது.

அதனைத் தொடர்ந்து அங்கு வாள் வெட்டு, தடியடிச் சம்பவங்கள் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இதனால், அப்பகுதியெங்கும் பதற்றம் நிலவுகிறது. இரு தரப்பினரும் வீதிகளில் மாறி மாறி தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவுவேளைகளில் வீதிகளில் அடிதடி மோதல்கள் உக்கிரமாக இடம்பெறுவதால் அப்பகுதியெங்கும் 'போர்க்களம்' போலக் காட்சியளிக்கிறது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலில் மட்டும் 5 பேர் காயமடைந்தனர். இதே இடத்தைச் சேர்ந்த முருகர் சரஸ்வதி (வயது 69) இவரது பிள்ளைகளான முருகர் இராமச்சந்திரன் (வயது 35), முருகர் யோகேஸ்வரன் (வயது 27) மற்றும் நாகேந்திரம் அற்புதம் (வயது 34), வரணி இயற்றாலையைச் சேர்ந்த சின்னக்குட்டி மகேஸ்வரி (வயது 54) ஆகியோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிகச் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

(முன்னர் வந்த செய்தி 08 ஆம் பக்கத்தில்) (த-74-117)

# சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கு விசேட விடுமுறை

தென்மராட்சி,ஏப்.19

சுனாமி பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அரச அலுவலர்களுக்கு விசேட விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பான சுற்றறிக்கைஒன்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலரினால் திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் ஏற்பட்ட போக்குவரத்து இடையூறுகளினால் கடமைக்கு சமுகமளிக்க முடியாது போனவர்களுக்கும் -

சொத்து சேதங்கள், தமது குடும்ப உறவினர்களின் உயிர் இழப்புக்கள் அல்லது காணாமல் போதல்கள் மற்றும் இடம்பெயர்தல் ஆகியவைகளினால் சேவைக்கு சமுகமளிக்க இயலாது போனவர்களுக்கும் அந்தத் தினங்களை விசேட விடுமுறையாக வழங்குமாறு அதில் பணிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெருக்கடிகளினால் சமுகமளிக்க முடியாதவர்களுக்கு கடந்த டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் இவ்வருடம் ஜனவரி 10 ஆம் திகதி வரையும் -

உயிர் மற்றும் சொத்து இழப்பீடுகள் காரணமாக வாழ்விடங்களிலிருந்து இடம்பெயர்ந்திருக்கும் அலுவலர்களுக்கு டிசெம்பர் 26 தொடக்கம் ஜனவரி 17ஆம் திகதி வரையும் விசேட விடுமுறை வழங்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-117)

# வாணவேடிக்கைகளுடன் வல்வையில் இந்திரவிழா!

கரவெட்டி, ஏப்.19

வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இந்திரவிழா நடைபெற உள்ளது. அன்றையதினம் காலை தொடக்கம் நள்ளிரவுவரை பல்வேறு நிகழ்வுகள் நடைபெறும்.

மேற்படி ஆலயத்தில் வருடா வருடம் தீர்த்தத்திருவிழா தினத்தன்று மிகப் பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் இந்த விழா நடப்பது வழக்கம். எனினும், கடந்த வருடம் தீர்த்தத் திருவிழா தினத்தன்று சந்திரகிரகணம் காரணமாக இந்த விழா நடைபெறவில்லை.

இந்த வருடம் அந்த விழாவை மிகவும் பிரமாண்டமான முறையில் - கண்களைக் கவரும் வாண வேடிக்கைகளுடன் சிறப்புற நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

வீதி வளைவுகள், மின்னொளி அலங்காரங்கள் என்பவற்றுக்கும் முன்னேற்பாடுகள் நடக்கின்றன.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் ஒவ்வொரு வருடமும் இந்த இந்திரவிழாவைக் கண்டு களிப்பதற்காக இங்கு வருவது வழக்கமாகும். (த.70)

# நகரில் திருட்டுக்களைத் தடுக்க விசேட பொலீஸ் அணி களத்தில்!

## சிவில் உடையில் உலவுகின்றனர்; பொறுப்பதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ்.நகரப் பகுதியில் இடம்பெற்று வருகின்ற திருட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்காக விசேட பொலீஸ் குழு ஒன்று பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

யாழ்.பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி விதானகே இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.நகரப் பகுதியில் இடம்பெற்று வருகின்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் எமக்குக் கிடைத்துள்ளன.

அதிலும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பனவற்றின் திருட்டுக்களே கூடுதலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனைக் கருத்திற் கொண்டு- இவ்வாறான திருட்டுச் சம்பவங்களைத் தடுப்பதற்காக யாழ்.பொலீஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவினால் விசேட பொலீஸ் குழு ஒன்று யாழ். நகரப் பகுதியில் கடந்த முதலாம் திகதிமுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை இவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்.நகரில் சன நெருக்கடியான இடங்களில் சிவில் உடையில் பொலீஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் மூலம் நகரப் பகுதியில் இடம்பெற்றுவருகின்ற திருட்டுச்சம்பவங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (த-7)

## உதயவாக்கு

பெரிய விஷயங்களைப் போலவே சிறிய விஷயங்களையும் கவனிக்கக் கூடிய மனம் உண்மையும் உரமும் பொருந்திய மனமாகும்.

- டாக்டர் ஜாக்சன்

## நாளை

சித்திரை 07
புதன்கிழமை
20.04.2005
திதி : ஏகாதசி
பிற்பகல் 02.57 வரை
நட்சத்திரம் : பூரம் முழுவதும்
ஏகாதசி விரதம்
சுபநேரம் : 04.32 - 06.02
ராகுகாலம் : 12.02 - 01.32
(யாவும் பழைய நேரப்படி)

# காலாவதியான தின்பண்டங்கள் நகர உணவகங்களில் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ்.நகரப் பகுதியில் உள்ள சில சிற்றுண்டிச்சாலைகளில் மனித பாவனைக்குதவாத உணவுப்பண்டங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த 11 ஆம் திகதி நகரப் பகுதியில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போதே வடை, றோல்ஸ், பழச்சாறு, பாண், பணிஸ் என்பன காலாவதியான பின்னரும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

கடை உரிமையாளர்களின் முன்னிலையில் அந்தத் தின்பண்டங்கள் அழிக்கப்பட்டன.

யாழ்.மாநகர வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் இந்தத் தகவலைத் தெரிவித்தார். (த-13)

# நன்னீர் கிணறுகள் உவராகும் அபாயம் தடுக்கப்படுவது அவசியம்! அவசரம்!!

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தின் நன்னீர் கடந்த சில காலங்களாக உவர் நீராக மாறி வருகின்றது. இத்தகைய நிலைமை தொடராது நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானது. அல்லது குடி தண்ணீர்ப் பிரச்சினை மட்டுமன்றி விவசாய நிலங்களும் பயிர்செய்ய முடியாதளவு பாரதூரமான நிலைமை ஏற்படும்.

வலிகாமம் மேற்குப் பிரதேசம் இந்து சமுத்திரத்தாலும் (பாக்குநீரிணை) யாழ்.கடல் நீரேரியாலும் சூழப்பெற்று 4930 ஹெக்ரேயர் நிலப் பரப்பை உள்ளடக்கி 200ஹெக்ரேயர் நிலப் பரப்பு விசாலமான உள்நாட்டு நீர்நிலைகளான குளம், கிணறுகள், வாய்க்கால் போன்றவற்

சேதமடைந்துள்ள துரிசினூடாக நன்னீர் கடலுக்கு செல்வதைக் காணலம்.



றைக் கொண்டதாக அமைந்து காணப்படுகின்றது.

அண்மைக் காலங்களாக நன்னீர் உவர்நீராக மாறுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி இங்கு 8,280 கிணறுகள் இருக்கின்றன. அவற்றில் 2,821 நன்னீர்க் கிணறுகள், 2388 ஓரளவு நன்னீர்க் கிணறுகள், 397 கடும் உவர் நீர் கிணறுகள் 2,644 நன்னீர்க் கிணறுகளும் 30பாழடைந்த கிணறுகளும் காணப்படுகின்றன.

இவற்றில் உவர்நீராக உள்ள 20வீதமான கிணறுகள் கடந்த பத்து வருடங்களுக்கு முன் நன்னீராகக் காணப்பட்டது. இத்தகைய நன்னீர் உவர்நீராக மாறிவருகின்ற நிலைமை மிக வேகமாக நடைபெற்றுவருவது தற்பொழுது அவதானிக்கப்பட்டிருக்கிறது.

### நன்னீர் உவர் நீராக மாறுவதற்கான நிலைமை

வலி.மேற்கு பிரதேசத்தில் காணப்படுகின்ற கடல் நீரேரிகளின் நீர்மட்டம் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால் கடல்நீர் நிலத்தடியினூடாகத் தரையை நோக்கி வேகமாக நகர்த்தப்படுகிறது இதனால், நிலத்தடி நீர் உவர் நீராக மாறுகின்றது நன் னீர்க் கிணறுகள் பல உவர்நீராக மாற்றம்பெறுகின்றன.

இப்பிரதேசத்திற்கு வளம் கொழிக்கும் வழுக்கையாற்றிற்கு தெல்லிப்பழையில் இருந்து கந்தரோடை ஈறாக மழைநீர் வாய்க்கால் வழியாக வந்து சேர்கின்றது.

அத்துடன், இப்பிரதேசத்தில் கிடைக்கும் மழை வீழ்ச்சியில் பெரும் பகுதியும் இவ்வழுக்கையாற்றில் சேர்கின்றது கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் அனர்த்தத்தினால் இதன் முக்கிய பகுதியான மேலதிக நீரினை கடலுக்குள் அனுப்பும் துரிசுகள் சேதமடைந்தன. இதனால் முழுநீரும் கடலைச் சென்றடைகின்றது.

### கடல் நீர் அதிகரிப்பு

வழுக்கையாற்றுக்கு வந்தடைகின்ற பெரும் பகுதியான நன்னீரும் தடுப்புப் பலகை இல்லாமையால் கடலில் வீணே கலக்கின்றது. இதனால், நன்னீர் மட்டம் குறைவடைகின்ற அதே வேளை, கடல் நீரின் மட்டம் உயர்வடைய நிலத்தடியூடாக உவர்நீர் வேகமாக உள்நோக்கி முன்னேறி வருகின்றது. இதனால், நன்னீர் உவா நீராக மாறிவருகின்ற நிலைமை இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது.

### உவர்நீர் தடுப்பு அரண்

அராலியில் இருந்து பொன்னாலை ஈறாக அமைக்கப்பட்ட உவர் நீர்த்தடுப்பரண் அழிவடைந்துள்ளமையால் நன்னீரும் கடல் நீரும் ஒன்றாகச் சங்கமிக்கின்றது. நன்னீர் கடலுக்குச்செல்ல கடல்நீரின் மட்டம் அதிகிக்கின்றது. இதனால் தங்குதடையின்றி நீர் தரைப்பகுதிக்குள் ஊடுருவிச் செல்கின்றது. இத்தகைய நிலைமையால் அராலி வடக்கு, அராலி கிழக்கு, அராலி மேற்கு, அராலி தெற்கு, அராலி மத்தி, வட்டு.தெற்கு, மூளாய், அரசடிபோன்ற பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் பல பயிர்செய்யமுடியாதவாறு உவர்நிலங்களாக மாறி வருகின்றன.

அராலிப் பாலத்திற்கு அருகில் காணப்படும் நீண்ட தரிசு நிலங்கள்.



கடந்த காலங்களில் சுமார் 200 ஏக்கரில் அராலிப் பகுதியில் செய்கை பண்ணப்பட்ட பம்பாய் வெங்காயம் தற்பொழுது செய்கை பண்ணுவதற்கு மண்வகை அருகி வருவதால் பெரும்வீழ்ச்சி கண்டுவருகிறது.

### குடிதண்ணீர் பிரச்சினை

வலி.மேற்குப் பிரதேசம் முன்னெப்போதும் கண்டிராத குடிதண்ணீர் பிரச்சினையை அண்மைக் காலமாக எதிர்நோக்கிவருகின்றது.

## வலி.மேற்கைச் சூழ்கிறது ஆபத்து

பெருமளவு கிணறுகள் படிப்படியாக உவர் நீராகி வருவதனால் மக்கள் குடிதண்ணீரை பெறுவதற்கு ஒருமைல் தூரம் செல்லவேண்டிய நிலைமையும் ஏற்படுகின்றது.

**செய்திக் கட்டுரை**

**வான்மதி**

சில இடங்களில் குழாய் மூலம் நீர் வழங்கப்பட்டுவருகின்றபோதும் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாதவாறு அதிகரித்து வருகின்றது. இத்தகைய நிலைமை தொடராமல் தடுப்பதற்கும் அதனைப் படிப்படியாகத் தணிப்பதற்கும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது.

### மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள்

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு உடனடியாக வழுக்கையாற்றினூடாக கடலில் கலக்கின்ற நன்னீரைத் தடுத்து அதனைத் தேக்கிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். சேதமடைந்துள்ள துரிசினை புனரமைத்து, நன்னீர் கடலில் கலப்பதைத் தடுப்பதனூடாக கடல் நீர்மட்டம் அதிகரிப்பது தடுக்கப்படுவது மட்டமல்லாது நன்னீர் மட்டம் அதிகரித்து உவர்த்தன்மை நிலத்தடியினூடாக கடலை நோக்கி நகர்த்தப்படும்.

அராலிப் பாலத்தினைப் புனரமைத்து அதன் அருகே தரிசு நிலங்களாகக் காணப்படும் நிலத்தில் நன்னீரைத் தேக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதனூடாக உவர்த்தன்மை உள் நோக்கி வருகின்றமை தடுக்கப்படும்.

இப்பிரதேசத்தில் முக்கியமாக உவர் நீர் தடுப்பரண் அமைக்கப்படவேண்டும். அராலியில் இருந்து பொன்னாலை வரை கடல் நீர் விவசாய நிலங்களுக்குள் ஊடுருவாது. அதேநேரம் நன்னீர் கடல் நீரோடு கலக்காது அமைக்கப் படவேண்டிய உவர் நீர் தடுப்பரண் உடனடியாக விரைவுபடுத்த வேண்டும். அதன்மூலம் குடி தண்ணீர் மட்டுமன்றி விவசாய நிலங்களும் பாதுகாக்கப்படும்.

இதுமட்டமன்றி வலி.மேற்குப் பகுதியில் காணப்படும் 43 குளங்களையும் ஆழமாக்கி அவற்றில் நீரினைச் சேகரிப்பதனூடாக நிலத்தடி நீரைப் பாதுகாக்கமுடியும் இக்குளங்களில் சில ஆழமாக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. இவற்றுக்குச் சுற்றவுள்ள கிணறுகளில் உவர்நீர் நன்னீராக மாறிவருவதையும் அறியமுடிகின்றது.

இத்தகைய நடவடிக்கையை விரைந்து மேற்கொண்டு இப்பிரசேத்தில் குடிநீர் மற்றும் விவசாய பயிர்நிலங்கள் உவராக மாறுவதில் இருந்து பாதுகாத்து எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தண்ணீர் பிரச்சினையைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ★




உ

சாவகச்சேரி- பெருங்குளம்

**அம்பலவாண வீரகத்தி விநாயகராலய**

**வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்**

கடந்த 30-01-2005ஆம் திகதி நடைபெற்ற ஆலய பரிபாலனசபைக் கூட்டத்தில் 5ஆவது தீர்மானப் பிரகாரம் 2005ஆம் ஆண்டுக்கான மஹோற்சவம் பின்வருமாறு நடைபெறுகிறது.

13-06-2005 பகல் 11.00 மணிக்குக் கொடியேற்றம்
21-06-2005 பகல் 11.00 மணிக்கு ரதோற்சவம்
22-06-2005 பகல் 10.00 மணிக்குத் தீர்த்தோற்சவம்

இதனைச் சகல வழிபடுவோர்களுக்கும் விழா விரதகாரர்களுக்கும் பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
கல்வயல்,
சாவகச்சேரி. (44402)(26-11-14) பதிவு இல. HA/JA/5/261.



## கேள்வி அறிவித்தல்

**வீடமைப்பு நிர்மாணத்துறை கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு.**

**கட்டடங்கள் திணைக்களம்**

1. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கணனி அலகு கட்டடப் பகுதிக்கு அலுமினியக்கதவு, யன்னல் செய்து பொருத்துதல். இவ்வேலைக்கான சீலிடப்பட்ட கேள்விகள், யாழ்ப்பாணம் கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபைத் தலைவரால் 2005-05-04 மு.ப.10 மணிவரை கோரப்படுகின்றது.
2. கேள்விப்பத்திரங்கள் 2005-04-28ஆம் திகதி பி.ப.3.30 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணமாக ரூபா ஐந்நூறு மட்டும் (ரூபா 500/-) செலுத்தி *யாழ்ப்பாணம் கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)* அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்விகள் மூடப்பட்டவுடன் *யாழ்ப்பாணம், கடற்கரைவீதி, கட்டடங்கள் திணைக்கள, பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)* அலுவலகத்தில் உடன் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
4. கடந்த 5வருடங்களில் இதேமாதிரியான வேலைகள் செய்த முனைய அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டுமே கேள்விப்படிவங்கள் வழங்கப்படும். கேள்வி ஆவணங்களைப் பெறமுன் இதற்கான ஆவணச்சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.
5. பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத்தபால் மூலம் *யாழ்ப்பாணம் கடற்கரைவீதி, கட்டடங்கள் திணைக்களம், மே/பா பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)* கேள்விச் சபைத் தலைவருக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
6. தாமதப் பிணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன், மேலதிக விவரங்களை *யாழ்ப்பாணம், கடற்கரைவீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)* அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதம பொறியியலாளர்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**கடற்கரைவீதி, யாழ்ப்பாணம்.** (சி-42377)(46-11-14-26)


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ்.மாவட்டத் தொண்டர் அசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11மணியளவில் ஆரியகுளத்தடியில் உள்ள புதிய உயர்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (த-13)

## சொற்பொழிவு

சுழிபுரம்,ஏப்.19

மாதகல், நுணசை முருகமூர்த்தி ஆலயத்தில் திருவிழா நடைபெற்று வருகின்றது. இதனை முன்னிட்டு தினமும் பிற்பகல் ஒரு மணிமுதல் 'திருமுருகாற்றுப்படையுடைய வேலா' என்னும் பொருளில் ஆசிரியர் நித்தியதசீதரன் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றார். எதிர் வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுவரை இந்த சொற்பொழிவு இடம்பெறும். (த-28)


**கணக்காளர் தேவை**

யாழ்.மாநகர எல்லைக்குள் இயங்கும் உற்பத்தி நிறுவனத்தின் அனைத்து கணக்கு புத்தகங்களையும் எழுதி உற்பத்தி இலாப நட்டக் கணக்கு, ஐந்தொகை தயாரிக்கக்கூடியவரும் கணனியில் பணியாற்றக்கூடிய முன் அனுபவமுள்ளவர்கள் உடன் பத்திரிகைக் காரியாலயத்திற்கு தங்களது விவரங்களை அனுப்பிவைக்கவும் .

விளப்பர இல.2561
மே/பா உதயன். (சி-42385)(38-11-45)



**ஸ்ரார் கல்வி நிலையம்**
சுன்னாகம்

O/L DAY CLASS

பிரிவுI நடைபெறுகின்றன.
திங்கள் முதல் வெள்ளிவரை.
(7.00-2.00) (44404)(38-11-45)
பிரிவுII மிக விரைவில்......



## இவரைக் காணவில்லை



சாவகச்சேரி, நுணாவில் மேற்கு
**தங்கவேலு - கமலாதேவி**
தம்பதிகளின் அன்பு மகன "கண்ணா"
என்று அழைக்கப்படுகின்ற

**இராஜசேகரன்**

என்பவரைக் கடந்த 12-04-2005 செவ்வாய்க்கிழமை முதல் காணவில்லை. இவா கடைசியாகக் காணப்பட்டபோது சிவப்பு நிறச்சேட்டும் சாம்பா நிற ட்ரவுசரும் அணிந்திருந்தார்.

அமைதியான சுபாவமுடைய இவரைக் காணாது பெற்றோர் கவலையும் ஏக்கமும் அடைந்து துயரத்தில் ஆழ்ந்துள்ளனர்.

இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு உடனே தகவல் தருமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

திரு.இராமன் தங்கவேல்,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி
*அல்லது*
(44401)(26-11-14) நகரசபை, சாவகச்சேரி.



## மரண அறிவித்தல்

**திருமதி சண்முகநாதன் யோகாம்பிகை**

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் மன்னார் உப்புக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகநாதன் யோகாம்பிகை (17.04.2005) ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் (இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் வேலுப்பிள்ளை-நாகம்மாவின் மருமகளும் காரைநகர் சக்கலாவோடை ஆறுமுகம்-நல்லம்மாவின் அருமை மகளும் சுந்தரேஸ்வரி (ஆசிரியை - இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), காலஞ்சென்ற தனேஸ்வரி மற்றும் மங்களேஸ்வரி (ஆசிரியை - வள்ளியம்மை வித்தியாசாலை அராலி), சிவனேஸ்வரி, யோகமலா (ஆசிரியை - வைத்தீஸ்வராக் கல்லூரி, யாழ்ப்பாணம்), லோகேஸ்வரன் (கல்வித்திணைக்களம், உயிலங்குளம், மன்னார்) ஆகியோரின் அருமைத் தாயாரும் குலநாதன், சிவஞானம் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.04.2005) திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் மன்னார் உப்புக்குளத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உப்புக்குளம், மன்னார்*
*T.P.02322 32937* (44409)(35-38-11-45)

தகவல்:
- பிள்ளைகள்

# விதைப்புக் காலத்திலும் அறுவடையின் போதும் அடைமழை பெய்ததால் நட்டத்தின் மேல் நட்டம்

## காப்புறுதி கிடைக்குமா என விவசாயிகள் ஏக்கம்

புதுக்குடியிருப்பு,ஏப்.19

புதுக்குடியிருப்பு, தண்ணிமுறிப்பு, குமுழமுனைப் பகுதிகளில் பெரும் மழை பெய்து வருவதால், விவசாயிகள் நெல் அறுவடை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், நெல் உற்பத்தியில் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியிருக்கின்றனர்.

சில வயல்களில் ஏற்கனவே, நெல் வெட்டி அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு வைக்கப்பட்டிருந்த நெல் மழையினால் நிலத்தில் ஊறி, முளைவிட்டிருப்பதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

முன்னர் இந்த நெல் விதைக்கப்பட்ட காலப பகுதியிலும் தொடர்ச்சியாக மழை பெய்தது.

அதனால், விதைநெல் மழை வெள்ளத்துடன் அடிபட்டுப் போனதும் -

விவசாயிகள் திரும்பத் திரும்ப விதைத்தமையும் தெரிந்தவையே.

இவ்வாறு பல சிரமங்களுக்கு மத்தியில் விதைக்கப்பட்ட நெல் அறுவடைப் பருவத்தை அடைந்ததும் மீண்டும் மழை வந்து எல்லாவற்றையும் நாசம் செய்துவிட்டது.

இத்தகைய - காலம் தப்பிய மழையினால் விவசாயிகள் மீண்டும் மீண்டும் நட்டத்துக்கு மேல் நட்டத்தை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

மழையினால் ஏற்பட்ட இந்த அழிவுகளுக்கு நஷ்டஈடுகளை வழங்குவதற்கான காப்புறுதி ஏற்பாடுகள் எதுவும் இப்பிரதேச விவசாயிகளுக்குச் செய்துகொடுக்கப்படவில்லை என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் அக்கறை எடுத்து விவசாயிகளுக்கு நஷ்டஈட்டைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

(த-353)

## யோகபுரம் ம.வியில் ஆங்கிலப் பாசறை

துணுக்காய்,ஏப்.19

யோகபுரம் மகாவித்தியாலயத்தில் தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் ஆங்கிலப் பாடப் பாசறை நடைபெற்றது.

'லைற் கவுஸ்' திட்டத்தில் கிடைக்கப் பெற்ற மூலவளங்களைப் பயன்படுத்தி கடந்த 7ஆம், 8ஆம் திகதிகளில் இப்பாசறை நடத்தப்பட்டது.

(த-204)



புதுக்குடியிருப்பு, மருது பாடசாலையின் வருடாந்த நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. கலை நிகழ்ச்சி ஒன்றில் பாலர் பாடசாலை மாணவர்களான ந.சிதம்பரநடராஜன், ...னி, பூங்குழலி ஆகியோர் மேடையில் தோன்றும் காட்சியைப் படத்தில் காணலாம்.

## 'நியாப்' வேலைத்திட்டம் குறித்து ஆராய்வு

கிளிநொச்சி,ஏப்.19

'நியாப்' திட்டம் 01 மூலம் மேற்கொள்ளப்பட்டுவந்த வேலைத்திட்டங்களை ஆய்வு செய்து அத்திட்டங்களைத் தொடர்ந்து பராமரிப்பது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 12ஆம் திகதி வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

நீர்ப்பாசனப் பொறியியலாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப்பொறுப்பாளர், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர்கள், கிராமிய அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

கல்விளான், மல்லாவி, பழைய முறிகண்டி, ஜயன்குளம், மருதங்குளம், அம்பலப்பெருமாள், மூன்றுமுறிப்பு, பாலைப்பாணி, பனங்காமம் போன்ற இடங்களில் மேற்படி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(த-203)

## மாணவர்களுக்கு ஆலோசனைச் செயலமர்வு

புதுக்குடியிருப்பு,ஏப்.19

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் மொரட்டுவப் பல்கலைக்கழகத்தினரால் மாணவர்களுக்கான ஆலோசனைச் செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டது.

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் இப்பிரதேச மாணவர்களுக்கு பாடத்தேர்வும் அதன்முக்கியத்துவமும் பற்றி அவர்களில் பாடப்பரப்புக்குள் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

கடந்த 12ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர், முல்லை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(த-353-203)

# 15 வைத்தியர்கள் தேவை; இருவர் மட்டுமே கடமையில்!

## முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் இந்த நிலை

ஒட்டுசுட்டான்,ஏப்.19

முல்லை. மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் வைத்தியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவிவருவதாக வைத்திய கலாநிதி ஜெயகுலராசா தெரிவித்துள்ளார்.

முல்லை. வைத்தியசாலைக்கு 15 வைத்தியர்கள் தேவைப்படுகின்றனர். எனினும, இரண்டு வைத்தியர்கள் மட்டுமே சேவையிலுள்ளனர்.

இதனால், வைத்திய சேவை பாதிப்படைந்து வருகிறது. நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த வைத்தியர் பற்றாக்குறை குறித்து பலதடவைகள் அரசுக்குத் தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் புறக்கணிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

(த-341)

# அன்னை பூபதியின் நினைவாக இன்று வன்னியில் நிகழ்வுகள்

ஒட்டுசுட்டான்,ஏப்.19

தியாகதீபம் அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் இன்று வன்னிப் பெருநிலப்பரப்பெங்கும் மிகுந்த உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்று காலை முதல் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசங்களில் இதற்கென விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

முக்கிய சந்திகள், பொது இடங்களில் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அன்னை பூபதியின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. முக்கிய வீதிகளில் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் இன்று ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் உரைகள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

இதேவேளை, அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு வன்னியில் பல்வேறு இடங்களிலும் கடந்த சில தினங்களாகச் சிரமதானப் பணிகள் இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

(த-341)

# கண்டாவளை ம.வியில் சிறுவர் பூங்கா திறப்பு

பரந்தன்,ஏப்.19

கண்டாவளை மகா வித்தியாலயத்தில் கடந்த 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சிறுவர் பூங்கா ஒன்று திறந்து வைக்கப்பட்டது. வித்தியாலய அதிபர் சி.சிறிதரன் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது.

மங்கள விளக்கினைக் கண்டாவளை கிராம உத்தியோகத்தர் இ.சண்முகநாதன் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.பரமதாஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து சிறுவர் பூங்கா பெயர்ப்பலகையை கிளிநொச்சிப் பிரதேச சபை விஷேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

சிறுவர் பூங்காவைக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை மண்டபத்தில் அரங்கநிகழ்வுகள் இடம்பெற்றன.

புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயப் பிரதம குருவான சிவலோகநாதக் குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

கருத்துரைகளை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா கண்டாவளை பிரதேச செயலர் சி.சத்தியசீலன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி. பரமதாஸ், செயலாளர் பாவேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் வழங்கினர்.

(த-352)




# கரைச்சிப் பிரதேச சபையினால் ஸ்கந்தபுரத்தில் நூலகம் திறப்பு

ஸ்கந்தபுரம்,ஏப்.19

கரைச்சிப் பிரதேச சபையினால் ஸ்கந்தபுரம் பகுதியில் பொதுநூலகம் ஒன்று திறந்து வைககப்பட்டுள்ளது. இந்த நூலகத்தின் திறப்பு விழா கடந்த 15ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

நிகழ்வில், நூலகத்திற்கான சுவாமிப்படம், தேசியத் தலைவரின் உருவப்படம் என்பன மங்கள வாத்திய இசையுடன் முருகன் ஆலயத்தில் இருந்து பவனியாக எடுத்துவரப்பட்டன.

பிரதம அதிதியாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்துகொண்டு நூலகக் கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

ஆரம்ப நிகழ்வாக ஊற்றுப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சின்னையா பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை அக்கராயன் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் திருமாறன் ஏற்றிவைத்தார். கரைச்சிப் பிரதேச சபையின் கொடியினை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பெயர்ப்பலகையினை அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் குகானந்தராசா திரைநீக்கம் செய்துவைத்தார். பிரதான நூலகக் கட்டடத்தை அரச அதிபர் தி.இராசநாயகம் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

வரவேற்புரையினை பிரதேச செயலக உபபணிமனைப் பொறுப்பு அலுவலர் கே.மகேந்திரன் நிகழ்த்தினார். அரசியல்துறைப் பொறுப்பாளர் திருமாறன், சமாதான நீதிவான் ச. கிருஷ்ணபிள்ளை, கிளி.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செல்வி உஷா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

அரச அதிபர், பிரதம விருந்தினர் உரையினையும், கரைச்சிப் பிரதேச விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம் சிறப்பு உரையினையும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பொதுமக்கள், நிறுவனப் பிரதிநிதிகள், துணுக்காய் பிரதேச செயலர், பிரதேச சபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

(த-381)

# புன்னைநீராவிக் கிராமத்தில் கறுவாச் செய்கை வெற்றி!

பரந்தன்,ஏப்.19

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள புதிய புன்னைநீராவிக் கிராமத்தில் விவசாயி ஒருவர் கறுவாச் செய்கையில் ஈடுபட்டு வருகிறார். கறுவா உற்பத்தி அங்கு வெற்றியளித்திருக்கிறது என்று கூறப்படுகிறது.

அங்கு பயிரிடப்பட்ட கறுவாக் கன்றுகள் செழிப்பாக வளர்ந்து வருகின்றன. அந்த விவசாயியைப் பின்பற்றி வேறு சில விவசாயிகளும் கறுவா பயிரிடுவதில் ஆர்வம் காட்டத் தொடங்கியிருக்கின்றனர்.

பிரஸ்தாப விவசாயியின் கறுவா தோட்டத்தில் விளைந்திருக்கின்ற கறுவாச் செடி ஒன்றினையே படத்தில் காண்கிறீர்கள்.

(த-352)



## உப்பளப் பணியாளருக்கு விடுதி அமைப்பு

பரந்தன்,ஏப்.19

ஆனையிறவு உப்பளத்தில் பணிபுரியும் 80 பெண் பணியாளர்கள் தங்குவதற்கு விடுதி, பொது நோக்கு மண்டபம், சமையல்கூடம் என்பன அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்கு 'ஜி.ரி.இசற்.' நிறுவனம் 73 லட்சத்து 27 ஆயிரத்து 583 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதற்கான வேலைத் திட்டங்களைப் பொருண்மிய மதியுரையகம் முன்னெடுத்து வருகின்றது.

இந்த விடுதியை அமைப்பதன் மூலம் உப்பு உற்பத்தி நிறுவனத்தில் தங்கியிருந்து பணி செய்பவர்கள் நன்மையடைவர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விடுதிகளின் வேலைத்திட்டங்கள் விரைவில் பூர்த்தியாகும் நிலையிலுள்ளன.

(த-352-203)

# ஆதிக்க சக்திகளின் கொட்டம் அடக்கி தமிழினத்தை நிமிரவைத்த பூபதித்தாய்

பல்வேறு காலகட்டத்தில் பல்வேறு வடிவம் பெற்றுவரும் தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் அளப் பெரிய பங்காற்றி வருகிறார்கள்.

அடக்குமுறைக்கு எதிராக அணிதிரண்டு போராடிக் கொண் டிருக்கும் பெண்ணினம் வியக்கத்தக்க வகையில் மகத்தான அர்ப்பணிப்புகளைச் செய்துவருகிறது.

அந்தவகையில் பெண்ணினத்தை எழுச்சி பெறச் செய்து தன்னுயிரை மண்ணுக்காக அர்ப்பணித்த தியாகிகளுள் அன்னை பூபதியும் ஒருவர். அவரது தியாகம் கால வெள்ளத்தில் அழிந்து போகாது. இன்றுவரை எம் மனங்களிடையே ஒரு சரித்திரமாக வாழ்ந்து வருகிறது.

காந்திய வழியில் தியாகி திலீபன் ஆரம்பித்து வைத்த உண்ணாவிரத்தை - அறப்போரை தமிழின விடுதலைக்காக தாமும் ஆரம்பித்தார். இவர் மேற்கொண்ட புரட்சிகரமான சாத் வீகப் போராட்டம் தமிழினத்தின் விடிவிற்கே வழிவகுத்தது.

**அந்நிய சக்திகளின் ஆக்கிரமிப்புக் காலம்**

இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் எமது மண்ணில் காலடி வைத்து, தமிழினத்தை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டி ருந்தது. இந்திய இராணுவத்தால் பெண்கள், குழந்தைகள், சிறு வர்கள், இளைஞர்கள் என்ற வித்தியாசமின்றி தமிழ்மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதுமட்டுமன்றி எம் தமிழ்த்தேசியப் போராட்டமும் நசுக்கக்கப்பட்டுக் கொண்டிருந் தது.

இவற்றையெல்லாம் கண்டு, கேட்டு, பொறுக்காத அன்னை பூபதி 1988ஆம் ஆண்டு தனது 58ஆவது வயதில் தேச விடு தலைக்கான வேள்வித் தீயில் தன்னை ஆகுதியாக்கத் துணிந்தார்.



தேசப்பற்றுடனும் மன உறுதி யுடனும் அஹிம்சைப் போரில் ஈடு பட்டிருந்த அன்னைபூபதியை உணர்ந்துகொள்ளாத இந் திய ஆக்கிரமிப்புப் படையி னர், மிரட்டல்களையும் அச்சு றுத்தல்களையும் விடுத்தனர். அவற்றுக்கெல்லாம் அடி பணியாது தனது சாத்வீகப் போராட்டத்தைத் தொடர்ந் தார்.

சற்றும் தளராது துணிவு டன் இவர் மேற்கொண்ட அஹிம் சைப் போராட்டம் 32ஆம் நாள் அமைதியுடன் முடிவுக்கு வந்தது.

ஆகாரம், எதுவுமின்றி தன்னுயிரை உருக்கித் தமிழினத் தின் விடிவுக்கு ஒளிகொடுத்த இவரது சாதனை உலக வர லாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டது.

தமிழினத்தின் விடுதலையை - சுபீட்சத்தை சர்வதேசம் இதன் பின் உற்று நோக்கத் தொடங்கியது எனலாம்.

**பெண்ணின எழுச்சிக்கு வழிகாட்டியவர்**

பெண்கள், இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்கிப் பல இன்னல்களை அனுபவித்தனர்.

அன்னைபூபதி இவற்றைக் கண்டும் கேட்டும் கொதித் தெழுத்தார். தமிழின விடுதலையின் அவசியத்தை உணரச் செய்ய அஹிம்மை வழிப்போராட்டத்தை நடத்தினார்.

அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் தன் உணர்வுகளைப் புதைத்து வாழ்ந்த பெண்களுக்கெல்லாம் முன்னுதாரணமாகி தேச விடுத லைக்கு வழிகாட்டினார்.

ஒரு சாதாரண பெண் வயோதிபத் தாய், எத்தகைய பிரச்சி னைகள், அடக்குமுறைகள், வன்முறைகள் என்றாலும் எதிர்த் துப் போராடித் தன்னையும் தன் சார்ந்தவர்களையும் விடுவித் துக்கொள்ள முடியும் என்பதைச் சாதித்துக்காட்டியவர்.

குடும்பம், பிள்ளை, உறவு என்ற குடும்பச் சங்கிலிக்குள் புதைபட்டுப் போகாது மொழி, இனம் என்பவற்றுக்காக இவர் நடத்திய அஹிம்சை யுத்தம் உன்னதமான வழிகாட்டியாக அமைந்தது.

தேச விடுதலைக்காக உண்ணா நோன்பிருந்து தன்னுயி ரைத் தியாகம் செய்த உலகின் முதற் பெண்மணி என்ற பெருமையைத் தனக்கும் தனது தமிழினத்திற்கும் தேடித் தந்தார் தியாகதீபம் அன்னைபூபதி.

தமிழினப் போராட்டத்தின் எழுச்சிக் குரலாக - பெண் குலத் தின் புரட்சி வடிவமாக அன்னைபூபதி எம் மனதில் அணையாத தீபமானார்.

மதியழகி

இவர் தமிழினத்துக்காகத் தன்னுயிரைத் தற்கொடையாக்கி 17 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் அவரின் தியாகம் என்றென்றும் எம் மனங்களில் நீங்காது வாழும்.

தற்கொடையாளி அன்னைபூபதியை நினைவுகூரும் இந்த நாளில் அனைத்துத் தமிழீழப் பெண்களும் அணி திரண்டு தமக்குரிய தேசியக் கடமையை உணரவேண்டும். விடுத லையைப்பெற முனைப்புடன் உறுதிபூண வேண்டும். ★

## விடுதலைத் திலகம் அன்னை பூபதி

ஈழத் தியாகிகள் வரிசையில்
திலீபன் அண்ணாவின் வழியினில்
அஹிம்சை வழியில் நோன்பிருந்து
உலக வரலாற்றில் இடம்பிடித்தாய்
பேரின சக்திகளின் அடக்குமுறைகளை
தடைத்தெறிய வந்துதித்த பூபதித் தாய்
மெழுகுவர்த்தி போல் ஒளிதந்து ஆகுதித் தீயில்
உடலை உருக்கி
வேள்வியில் சங்கமித்த அன்னையிவள்
மீன்பாடும் மட்டுநகர் மீதினிலே
மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில்
நீ நடத்திய வேள்விப் போர்
இரத்தம் சித்தும் போராட்டமல்ல...

சாத்வீகம் பற்றி இந்தியாவிற்கே
உணர்த்திய எங்கள் பூபதித்தாய்
அமைதிப் படையென்று வந்துவிட்டு
அடக்குமுறை செய்த கூலிப்படையை
புறமுதுகிட்டு ஓட வைத்த
எங்கள் வீரத்தாய் நீயல்லவா....!
உன் வழியில் போராட்டம் தொடரும்
அண்ணன் வழியில் தமிழீழம் மலரும்.

து.ஜெயரூபன்,
கந்தரோடை.

## பூபதி என்ற பொன்நதி

*தாமரைப் பூக்களின்*
*தங்கக் கவிதையே*
*சாமரை வீசுகின்றோம்*
*பூபதி நிலவே!*

*வாழ்க்கையை வாழ்வுக்காக*
*வாழாத தாய்மையே*
*நாள்களை நமக்காக*
*கரைத்த நாதமே*

*அர்த்தங்கள் நிறைந்த*
*அஹிம்சை சூரியனே!*
*சக்கரமாய் சுற்றிடும்*
*சந்தன நதியே!*

*தூறலில் நனையாத*
*தோகை மயிலே*
*அர்த்தங்கள் நிறைந்த*
*அணுவின் உலையே*

*பூக்கள் தூவுகின்றோம் - உன்*
*புரட்சியை வணங்குகின்றோம்*
*நாள்கள் பார்கின்றோம் உன்*
*நாமத்தைக் கோர்க்கின்றோம்*

- பூபதி புலேந்திரராசா,
வதிரி. கரவெட்டி.

## அன்னையே உம் வழியில் சாதனை தொடர்ந்திடுவோம்...

மட்டுநகரில் வந்துதித்த தியாக தீபமே!
விடியலுக்காக விழித்திற்ற எங்கள்
அன்னையே!
உண்ணா நோன்பிருந்து
உன்னை அர்ப்பணித்தாய்....
நீ அன்று விட்ட மூச்சில் தானம்மா
ஈழப்பெண்கள் நாம் சுவாசிக்கின்றோம்.
ஆணுக்கு நிகராகப் பெண்களும் இங்கு
சாதிக்க முடியும் என்று நிரூபித்த தாயே!
உன் வழியில் சாதனையை
தொடர்ந்திடுவோம் இது உறுதி !

- சிவதாஸ்.

# கலைப்பீடத்துக்குத் தெரிவான மாணவர்கள் பதிவுசெய்க

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு 2004/2005 கல்வியாண்டில் விசேட பாடத்தின் அடிப்படையில் 132 பேர் தெரிவுசெய்யப்பட்டுள் ளனர்.

இவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

நேற்றும் பெரும் எண்ணிக்கையான மாண வர் கள் தமது பதிவுகளை மேற்கொண்டனர்.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத - விசேட பாடத்தின் அடிப்படையில் தெரிவுசெய் யப்பட்ட மாணவர்கள் தமது பதிவுகளை இன்று அல்லது நாளை தவறாது மேற்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக பரீட்சைகள் அனுமதி கள் கிளையின் உதவிப் பதிவாளர் கேட்டுள் ளார்.

இவர்களுக்கான விரிவுரைகள் உடனடி யாக ஆரம்பமாகவுள்ளன எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

(த-12)

# கட்டாக்காலி நாய்கள் சாவகச்சேரியில் அழிப்பு

தென்மராட்சி,ஏப்.19

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கட்டாக்காலியாக அலையும் நாய்களைப் பிடித்து அழிக்கும் பணியினை சாவகச்சேரி நகரசபையினர் ஆரம்பித்துள்ளனர்.

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் பணிகள் நகரசபை எல்லைக்குட்பட்ட பகு திகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளதால் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு நகரசபைச் செயலாளர் திருமதி குணமணிதேவி அறிவித்துள்ளார்.

(த-117)

# கமலாகரனின் ஆங்கிலத் தொகுப்பு நூல் இணுவில் அறிவாலயத்தில் வெளியீடு

வலிகாமம்,ஏப்.19

இணுவில் செல்லத்துரை கமலாகரன் எழு திய பிரதிபலிப்புகள் (Reflections) என்னும் ஆங்கில சிறுகதை - கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இணுவில் அறிவாலயம் மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது.

இணுவில் இலக்கியக் குழுத் தலைவரும் கவிஞருமான சா.வே.பஞ்சாட்சரம் தலைமையில் இந்நூல் வெளியீடு இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராசா, கந்தரோடை ஸ்கந்த வரோதயக் கல்லூரி உப அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் ஆகியோர் வாழ்த் துரைகளை வழங்கினர்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் இளைப் பாறிய உபஅதிபர் த.தேவராசா நூலின் அறி முக உரையை நிகழ்த்தினார்.

பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபரும் ஆங்கில விரிவுரையாளருமாகிய கவிஞர் சோ.பத்மநாதன், இளைப்பாறிய ஆங் கில பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ப.ஆனந்த மகேஸ்வரன் ஆகியோர் நூல் ஆய் வுரையை நிகழ்த்தினர்.

யாழ். பல்கலைக்கழகக் கல்வித்துறைப் பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றி னார்.

நூலாசிரியர் செல்லத்துரை கமலாகரன் ஏற்புரை நிகழ்த்தினார். அவருக்கு இணுவில் மக்கள் சார்பில் செஞ்சொற்செல்வர் ஆறு.திரு முருகன் பொன்னாடை போர்த்துக் கௌரவித் தார்.

(த-152)

## கல்வியியற் கல்லூரி விரிவுரைகள் 2ஆம் திகதி ஆரம்பம்

வலிகாமம்,ஏப்.19

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி யின் இவ்வருட இரண்டாந் தவணைக்கான விரிவு ரைகள் எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாகும் என மேற்படி கல்லூரி யின் பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்துள் ளார்.

ஏற்கனவே, அறிவிக்கப்பட்டபடி இம்மாதம் 28ஆம் திகதி கல்லூரி ஆரம்பிக்கப்படமாட்டா தெனவும் அவர் தெரிவித்தார்.

கல்லூரியின் முகிழ்நிலை ஆசிரியர்கள் மே மாதம் முதலாம் திகதி மாலையே கல்லூ ரிக்கு வருகை தந்து தமது வரவினை உறு திப்படுத்திக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள் ளது.

(த-152)

## இரத்த பரிசோதனை தகடுகள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஏப்.19

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு 200 இரத்தப் பரிசோதனை (குளுக்கோ மீற்றர்) தகடுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

8ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தத் தகடு களை மீசாலையைச் சேர்ந்த டாக்டர் குண சிங்கம் என்பவர் வழங்கியுள்ளார்.

இத்தகடுகள் அண்மையில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் கையளிக்கப்பட்டன.

(த-117)



**சங்கானை அரசினர் இயந்திர மட்கல நிலையத்தில் கடந்த பெப்ரவரி மாதம் பெண்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.**

**அந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதரம்பரநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் யாழ். மாவட்ட தொழில்துறை முகாமைத்துவ உதவியாளர் சி.இராகவன், மேற்படி நிலையப் போதனாசிரியர் அ.திருச்செல்வம் ஆகியோர் அருகே நிற்பதையும் படத்தில் காணலாம்.**

*(படம் : சங்கானைச் செய்தியாளர்)*

# பரீட்சைச் சாதனைகள் பற்றி— மாணவர்கள் மனம் திறக்கிறார்கள்

அண்மையில் வெளியிடப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் குடாநாட்டைச் சேர்ந்த 23 மாணவர்கள் பத்துப்பாடங்ளிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

ஒப்பீட்டளவில் குடாநாட்டின் கல்வித் தரம் வீழ்ச்சி கண்டுவருவதாகக் கூறப்படுகின்றது. எனினும், இந்த மாணவர்களின் பரீட்சைச் சாதனைகள் மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்திருக்கின்றன.

'10ஏ' சித்தி பெற்ற மாணவர்களை அணுகி உங்கள் கல்விச்சாதனைப் பற்றி ஏதாவது கூறுங்களேன் என்று கேட்டோம்.

பெருமையுடன் அவர்கள் பேசினார்கள். நீங்கள் படித்துப்பாருங்கள்.

'10 ஏ' சித்தி பெற்ற ஏனையோரின் கருத்துக்கள் பின்னர் தொடர்ந்து உதயனில் வெளியாகும்.

## "....பெற்றோர்கள் கொழும்பில்...... மாமா வீட்டிலிருந்தே படித்தேன்..."



சிவானந்தன் யோகானந்
யாழ். இந்துக்கல்லூரி

நான் தரம் 5 வரை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்து யடைந்து இந்துக் கல்லூரியில இணைந்து கொண்டேன்.

என்னுடைய அப்பா கொழும்பில் ரெலிகொம தொலைத் தொடர்பு பரிசோதகராகக் கடமையாற்றுகிறார். அம்மாவும் கொழும்பு சென்.அன்ரனீஸ் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்.

நான் 16 வருடங்களாக என்னுடைய மாமா வீட்டாருடன் இருந்துதான் கல்விகற்றேன்.

படிக்கின்ற நேரங்களில் என்னுடைய மாமா எனக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்குவார். உதாரணத்துக்கு சொல்லப்போனால் படிக்கின்ற நேரத்தில் இரவுவேளைகளில் வீட்டில் ரீ.வி. போட்டுப்பார்ப்பார்கள். நான் படிக்கின்ற அறையிலிருந்து படிக்க மனம்வராது ஒருதடவை ரீ.வி. பார்க்க வேணும்போல இருக்கும் படிப்பை விட்டுவிட்டு இடையில் போய்ப்பார்ப்பேன்.

இப்படி நான் இரண்டு மூன்று தடவைகள் செய்திருப்பேன். ஆனால், ரீ.வி.பார்க்காது படி என்று மாமா சொல்லவில்லை. அதற்குப் பதிலாக தாம் ரீ.வி பார்ப்பதை முற்றாக நிறுத்தி வட்டார். இது அவர்கள் எனக்காக செய்த விட்டுக்கொடுப்பு என்று தான் சொல்லவேண்டும்.

நான் கூடுதலாக அதிகாலையில்தான் விரும்பிப் படிப்பேன். அந்த நேரமே என் கல்விக்குரிய வரப்பிரசாத நேரமாகக் கருதிக் கொள்வேன்.

நான் வெறுமனே கல்வியோடு நின்று விடவில்லை வேறுபல துறைகளிலும் என்னை ஈடுபடுத்தியுள்ளேன்.

உதாரணத்துக்கு 'செஸ்' போட்டிகளில் பங்குபற்றி 5 தடவை தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ளேன். இவ்வாறான காலங்களில் என்னுடைய கல்வியில் தளம்பல் நிலை ஏற்பட்டதுதான். இருப்பினும் எந்த நேரத்திலும் எதையும் சமாளிக்கும் வல்லமை இருந்ததால் வெற்றி பெறலாம் என்று என்மனதைத் திடப்படுத்திப் படித்தேன்.

பண்ணிசைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளைப் பெற்றுள்ளேன்.

எனக்கு "10ஏ" பெறுபேறு கிடைத்தது என்றவுடன் கொழும்பிலுள்ள எனது பெற்றோர் உடனே ரெலிபோன் பண்ணிச் சொன்னார்கள் உண்மையில் அது நான் எதிர்பார்த்த ஒன்றுதான். தற்போது உயர்தரக் கல்விக்காக உயிரியல் துறையைத் தேர்ந்தெடுத்துள்ளேன். என்னுடைய எதிர்கால இலட்சியப் பயணத்துக்கான அடி எடுத்து வைத்துள்ளேன். அப்பா, அம்மாவின் எதிர்பார்ப்புப்போல ஒரு வைத்தியராக வருவேன் என்ற நம்பிகையுடன் கல்வியைத் தொடர்ந்து, நான் பிறந்த மண்ணுக்குச் சேவையாற்ற வேண்டுமென்பதுதான் இலட்சியம்.

## "....தன்னம்பிக்கையும் தெய்வ நம்பிக்கையுமே காரணம்..."

நான் தரம் 5 வரை இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்விகற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இந்துக் கல்லூரியில சேர்ந்து கொண்டேன்.

அப்பா யாழ். இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். அம்மா வீட்டுப் பணிசெய்பவர்.

இரவு 11 மணியளவிலிருந்து ஒருமணி வரையும்தான் படிப்பேன். காலையில் படிப்பதில்லை. நான் படிக்கிறது அம்மா, அப்பாவுக்குக் கூடத்தெரியாது. அவர்கள் நித்திரைக்குப் போன பின்னர்தான் நான் படிப்பேன்.

தனியார் கல்வி நிறுவனத்துக்குப் போவதில்லை. விஞ்ஞான பாடத்திற்கு மட்டும் வீட்டில் ஓர் ஆசிரியரை ஒழுங்கு படுத்தி விசேடமாகக் கற்றேன்.

நான் கல்வியோடு மட்டும் நின்று விடவில்லை. பாடசாலையில் சகல துறைகளிலும் என்னை ஈடுபடுத்திக் கொள்வேன். நான் நல்ல பெறுபேற்றை எடுப்பேனா? என்ற கேள்வி பலருடைய உள்ளத்தில் எழுந்தது. ஆனால், எனக்கு அந்த நம்பிக்கை இருந்தது. காரணமென்னவென்றால் நான் தெய்வத்தை நம்புபவன். அந்த நம்பிக்கையில் நான் தெளிவாக இருந்தேன்.



குணசிங்கம் அமரேஷ்
யாழ். இந்துக்கல்லூரி

நான் வீட்டில் அதிகநேரம் எடுத்துப் படிப்பதில்லை. வகுப்பில் படிக்கின்ற போது கிரகித்துக் கொள்வேன். அத்துடன் தினமும் ஞாயிற்றுக்கிழமைகளில் சாயிபாபாவின் பஜனைக்குச் செல்வதுண்டு அங்குபோன பின்னர் புதிய தெம்பு பிறக்கும். பாடசாலைகளில் ஆங்கில தினப் போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்துக்குத் தெரிவானேன். கூடைப்பந்தாட்டப் போட்டி மற்றும் இல்ல விளையாட்டுப் போட்டிகளில் தொடர்ச்சியாகச் சம்பியனாக வந்துள்ளேன்.

எனக்கு "10ஏ" பெறுபேறுவரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

ஆனால், நான் எதிர்பார்த்தேன். அதாவது, ஒவ்வொரு பாடப் பரீட்சையும் எழுதிவிட்டு சுயமாகத் திருத்தி நானே தீர்மானித்துக் கொள்வேன்.

அந்த நம்பிக்கையில் மனதைத் தளர விடாமல் இருந்தேன். எதிர்பார்ப்பு மழுங்கடிக்கப்படவில்லை. தற்போது உயர்தரக் கல்விக்காகக் கணிதத்துறையை தேர்ந்தெடுத்துளளேன். எதிர்காலத்தில் ஒரு பொறியியலாளராக வர வேண்டுமென்ற இலக்குடன், நிச்சயம் வருவேன.

இறுதியாக தெய்வநம்பிக்கையும் தன்னம்பிக்கையும் இருந்தால் வாழ்க்கையில் எதையும் சாதிக்கலாம் என்பது என் சிறுவயது அனுபவம்.

செவ்வி - கவிதரன் - படங்கள் - பிரபா

## "ரீ.வி. பார்ப்பதே இல்லை... படிப்பதே பொழுதுபோக்கு..."



கோபாலசுதந்திரன் -
கிருத்திகா
வேம்படி மகளிர் கல்லூரி

நான் தரம் ஒன்றிலிருந்து 5வரை யாழ். ஜோன் பொஸ்கோ பாடசாலையில் கல்வி கற்று புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து வேம்படி மகளிர் கல்லூரியில் சோந்து கொண்டேன்.

அப்பா ஒரு கடை வைத்திருக்கிறார். (பான்சி ஹவுஸ்), அம்மா வீட்டுப்பணி செய்பவர். இந்தப் பெறுபேறு கிடைக்க எனக்குப் பக்க பலமாக இருந்தவர் என் அப்பாதான். என்னை இரவு 11மணிவரையும் படிக்க வேணுமெண்டு சொல்லிப்போட்டு அவரும் என்னோடு கூட இருப்பார். அதுமட்டுமல்ல, அதிகாலை 4மணிக்கெல்லாம் என்னை எழுப்பி 'படி பிள்ளை' என்று அடிக்கடி கூறுவார். அப்பா ஓரளவு படித்தவர். அதனால், கணிதபாடத்தில் ஏதாவது சந்தேகமென்றால் அப்பாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்வேன். நான் ரியூசனுக்கும் பாடசாலைக்கும் தவறாமல் ஒழுங்காகப் போவேன். அங்கு தருகின்ற நோட்ஸ் எல்லாம் அன்றைக்கே படிச்சிடுவேன். என்ர படிப்பு குழம்பிவிடும் என்று அப்பா ரீ.வி.கூட வேண்டேல. அதனால் நான் ரீ.வி. பார்ப்பது இல்லை. எந்த நேரமும் என்னுடைய நோட்ஸ் கொப்பியெல்லாம் எடுத்து வாசித்துகொண்டிருப்பேன். அதுதான் என்ர பொழுதுபோக்காகவும் இருந்திச்சு.

என்ர அப்பாவின் சிந்தனையெல்லாம் என்னை நல்லாப் படிப்பிக்க வேணுமென்பதுதான். அதனால், அப்பாவின்ர எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும். என்ற வைராக்கியத்துடனும் இலட்சியத்துடனும் படித்தேன். அதன் பயனாக '10ஏ' பெறுபேறு பெற்றுள்ளேன். இதனால் என்னைவிட என் அப்பாவுக்கே அதிக சந்தோஷம்.

நான் பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவேன், பேச்சு, கவிதை, சிறுகதைப் போட்டி ஆகியவற்றில் பங்குபற்றியுள்ளேன்.

என்னுடைய இந்தப் பெறுபேற்றுக்கு எனது கல்லூரி ஆசிரிய சமூகத்தின் அளப்பரிய பங்களிப்பும், ஒத்துழைப்பும் இன்றியமையாததொன்றாகும். உயர்தரத்துக்கு விஞ்ஞானத் துறையைத் தேர்ந்தெடுத்துள்ளேன். அந்தத் தொவு என்னுடைய சுயமான தெரிவு. பெற்றோர்கள் தடையெதுவும் போடவில்லை. எதிர்காலத்தில் ஒரு வைத்தியராகி நான் பிறந்த மண்ணிற்கு சேவையாற்ற வேண்டுமென்பதுடன், அப்பா என்மேல் கொண்ட நம்பிக்கையினை நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் எனது ஒரே இலக்கு.

## "...பெற்றோரின் திணிப்பு இல்லை என்பாட்டில் படித்தேன்..."

நான் தரம் ஒன்று முதல் 5வரை நயினாதீவு நாகபூசஷணி வித்தியாலயத்தில் கல்வி கற்று புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தேன். பினனர் தான் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் சேர்ந்தேன். எனது படிப்பிற்காகவே எமது சொந்த ஊரான நயினாதீவைவிட்டு யாழ்ப்பாணத்திலே தற்போது குடும்பமாக தங்கியுள்ளோம்.

எனது அப்பா நயினாதீவு நூலகத்தில் ஒரு காவலாளியாகக் கடமையாற்றி தற்போது ஓய்வுபெற்றுள்ளார். அம்மா வேலணை நூலகத்தில் நூலக உதவியாளராகக் கடமையாற்றுகிறார்.

நான் பரீட்சைக் காலங்களில் மட்டுமே அதிகமாக நேரமெடுத்துப் படிப்பேன். ஏனைய நேரங்களில் அன்றன்று ரீயூசனிலும் பாடசாலையில் கற்பிக்கின்ற பாடங்களிற்குரிய நோட்ஸை அன்றன்று படிச்சுக் கொள்ளுவேன்.

அதிகாலையில் படிப்பதுதான் எனக்கு நல்ல ஞாபகமிருக்கும். அதனால், நான் அதிகாலை 2மணிக்கே எழும்பிப் படிப்பேன். என்னை பெற்றோர் கட்டாயப்படுத்துவதில்லை. படி - படி என்று திணிப்பதில்லை. நானாக உணர்ந்து படிப்பேன்.

ஆனால், வீட்டில் ஒரே ஒரு கட்டுப்பாடு ரீ.வி. பார்க்கக்கூடாது என்று அதுதான் வீட்டில ரீ.வி.வேண்டி வைக்கேல. இந்தக் கட்டுப்பாடு ஏதாவதொரு விதத்தில் நன்மை அளித்துள்ளதென்றுதான். இப்போது நினைக்கிறேன்.



சண்முகலிங்கம்
சிவமங்கை
வேம்படி மகளிர் கல்லூரி

பெறுபேறுகள் வெளியாகிய போது எனக்கு எந்தவித அச்சமும் ஏற்படவில்லை ஏனென்றால் '10ஏ' பெறுபேறு வருமென்று எனக்கு அதீத நம்பிக்கை இருந்தது. அதனால் மனதைத் தளரவிடவில்லை.

வெறுமனே படிப்போடு நின்றுவிடவில்லை. பாடசாலைகளில் நடக்கின்ற அனைத்து கலை நிகழ்வுகளிலும் கலந்துகொள்வேன். குறிப்பாக, ஆங்கில தினட் போட்டிகளில் பங்குபற்றியுள்ளேன்.

தற்போது உயர்தரக் கல்விக்காக உயிரியல் துறையைத் தேர்ந்தெடுத்தேன். அதற்கு என்னுடைய பெற்றோர் மறுப்புச் சொல்லவில்லை. என்னுடைய பெற்றோர் என் கல்விக்கு அளப்பரிய பங்களிப்புச் செய்கிறார்கள். ஆனால், அவர்கள் எதையும் என்மீது திணிப்பதில்லை.

இறுதியாக தன்னம்பிக்கையும் சுயமுயற்சியும் இருந்தால் எதையும் சாதிக்கலாம். எத்துறையிலும் ஜொலிக்கலாம். என்பது என்னுடைய அபிப்பிராயம்.




மீசாலை வடக்கு, இராமாவல பரணி பாலர் பாடசாலைச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டியின் இடைவேளை நிகழ்வில், சிறார்கள் கலந்து கொள்வதைப் படத்தில் காணலாம்.

(படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)

யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜன் மற்றும் பாடசாலை அதிபர் அருட் சகோதரி ஜே.செல்வராணி ஆகியோரை மாணவர்கள் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: குருநகர் செய்தியாளர்)



# அன்னை பூபதி நினைவாக விவாதச் சுற்றுப் போட்டி

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் ஆதரவுடன் தமிழீழ மாணவர் அமைப்பினால் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விவாதச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு நல்லூரிலுள்ள கிட்டுப்பூங்காவில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள பாடசாலைகளான யாழ்.மத்தியகல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவைகளுக்கிடையே போட்டிகள் நடைபெறும். மேற்படி போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப்பெற்ற அணிகளுக்கு வெற்றிக்கேடயங்களும் தலா 5ஆயிரம் ரூபாவீதம் பணப்பரிசும் வழங்கப்படும். அத்துடன், போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

எனவே, போட்டியாளர்கள் அனைவரும் இந்நிகழ்விற்கு வருகைதர வேண்டும் என்று யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் சி.கிருஷ்ணா கேட்டுள்ளார். (த-203)


## ஏழாவது வருட நினைவஞ்சலி



அமரர் கதிரவேலு கந்தையா
(இரத்தினம் மெக்கானிக்)

தோற்றம் 08-07-1947 மறைவு 21-04-1998

ஆண்டுகள் ஏழு உருண்டோடிப் போனாலும்
அன்புத் தெய்வத்தின் நினைவுகள் மறையாது
ஈண்டு உங்கள் நினைவுடனேயே
இவ்வுலகில் நாங்கள் வாழ்கின்றோம்
மாண்டு நீங்கள் போனாலும் மறக்க முடியுமோ?
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
(44368)(46-
குடும்பத்தினர்.


## 'நிலவருகே மரணம்' நாடகம் பல்கலையில்

யாழ்ப்பாணம்,ஏப்19

அரசநாடக விழாவில் 2004இன் சிறந்த நாடகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'நிலவருகே மரணம்' என்ற சிங்கள நாடகம் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

கௌஷல்ய பெர்னாந்து கார்சியா லோகாவின் நெறியாள்கையில் இந்த நாடகம் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-203)

## கச்சாயில் கோஷ்டி மோதல்

யாழ்ப்பாணம்,ஏப்19

கச்சாய் கடற்கரையோரப்பகுதியில் இரு கோஷ்டியினரிடையே கடந்த மூன்று நாள்களாக ஏற்பட்டுள்ள மோதலால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவுவதாகத் தெரியவந்துள்ளது. இந்தக் கோஷ்டி மோதல்காரணமாக அப்பகுதி மக்கள் வீட்டைவிட்டு வெளியே செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

கடந்தமூன்று தினங்களாக இந்த மோதல் இடம்பெற்று வருகின்றது எனவும் இச்சம்பவத்தில் பலர் வாள்வெட்டுகளுக்கு இலக்காகி மிருசுவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-203)


## மறையாத நினைவுகளில்

## 2 ஆம் ஆண்டு நிறைவஞ்சலி



அமரர் திருமதி
பரமேஸ்வரி குமாரசாமி
(கரம்பகம், மிருசுவில்)

உதயம் 27-02-1950
மறைவு 27-04-2003

2 ஆம் ஆண்டு நிறைவுநாள்
20-04-2005

"உயிர் வாழ்க்கையில் விசுவாசம் கொள்பவர்
எவரும் ஒருபோதும் சாகார்"
எம் குடும்ப குலவிளக்கே!
எம் அனைவர் உயிர் விளக்கே!
எம் விடியலின் விடி விளக்கே!
எம் அனைவரையும் ஆறாத் துயரில்
ஆழ்த்தி விட்டு - அணைந்து விட்ட
எம் அகல் விளக்கே...!
எம் குடும்ப வளர்ச்சிக்காய்
வாழ்நாள் முழுதும் பாடுபட்டு
எமையெல்லாம் நல்வழிப்படுத்தி
விடியலின் பாதைகளில் உதயவேளை
அடையாளம் காட்டிவிட்டு
பரமபதம் அடைந்து விட்டீர்கள் - அம்மா!
உங்கள் உள்ளக் கனவுகளை - நீங்கள்
காட்டிய வழிசென்று - நாம்
உண்மைக் கனவாக்குவோம்!
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
உங்களை இழந்த துன்பத்தின் வடு
எம் நெஞ்சத்தை விட்டகலாது - அம்மா!
உங்கள் ஆத்மா இறை ஒளியில்
இரண்டறக் கலந்து ஆத்மமுத்தி அடைய
என்றுமே பிரார்த்திக்கும்

இல.17, திருவள்ளுவர் வீதி,
உக்குளாம் குளம்,
வவுனியா.
T.P.: 024-222 4370.

அன்புக் கணவர்
வே.குமாரசாமி,
பிள்ளைகள், மருமக்கள், பேரன்,
பேர்த்திமார், சகோதரர்கள்.

(43825)(50-)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் : 19.01.1946
மறைவு : 20.03.2005

முப்பத்தொருநாள் மூடி
விழித்தன கண்கள்
முத்தான உன் வார்த்தைகளும்,
அமைதியான முகமும் எம்
கண்களிலும்,
செவிகளிலும் நிறைந்திருக்கும்,
வித்தாக எமை விதைத்து விட்டு
சென்ற இடம் எங்கே?
தெரிகிறது எமக்கு சிவனவன்
அடியில் நீங்கள் இருப்பீர்கள்
என்று வணங்கிடுவோம்,



அமரர்
வாமதேவன் இராசரத்தினம்

32,மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

(44342)(51-)

பிரிவுத்துயரில்
குடும்பத்தினர்.

# பெரும் எண்ணிக்கையில் மக்களை அழிக்கும் ஆயுதங்களை தடுப்பதற்கான செயற்பாடுகள் முனைப்புப் பெறவில்லை

## வெறும் திட்டங்கள் வகுத்து என்ன பலன்?

**கனடா வோட்டலு வில்பிரட் லொறிவர் பல்கலைக் கழகத்தில் அண்மையில் ஐ.நா. சபையினைச் சீர மைப்பது சம்பந்தமான மாநாடு நடைபெற்றது. இலங்கை அரசின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால இந்த மாநாட்டில் கலந்துகொண்டு "பெரும் எண்ணிக்கையில் மக்கள் அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களும் பயங்கரவா தமும்" என்ற தலைப்பில் உரையாற்றினார். அந்த உரையின் தமிழாக்கம் இது.**



கடந்த மார்ச் 21ஆம் திகதி ஐ.நா. செயலாளர் நாயகத்தால் விடுக்கப்பட்ட "விரிவான சுதந்திரம்; சகலருக்கும் அபிவிருததி, பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள்" தொடர்பான அறிக்கையானது ஆயுதக்குறைப்பு, ஆயுதப் பரவல்தடை பற்றி பேசுவதுடன், உறுப்பு நாடுகளை அணு ஆயுதம் உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்களை அனுமதிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கின்றது. அதாவது பெருமளவு பொதுமக்களை அழிக்ககூடிய ஆயுதங்கள் பயங்கரவாதிகளின் கைகளில் போய்ச் சேராமல் பார்த்துக்கொளள வேண்டும் என்பதே.

செப்ரெப்பர் 11ஆம் திகதிய அமெரிக்க சம்பவத்தின் பின்னர் இந்த எச்சரிக்கை மிக அவசரமாக மீண்டும் மீண்டும் கொள்கை வகுக்கும் அமைப்புகளினால் விடுக்கப்பட்டுவருகின றது.

அணு ஆயுதப் பாவனை, பயங்கரவாதம் போன்றவற்றைத் தடுப்பதற்கான பேச்சுக்களை முழுமையாக்குவதற்கான சிபாரிசு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உறுப்பு நாடுகளை இந்த அறிக்கை வற்புறுத்திக் கேடடுக்கொள்கின்றது.

இருந்த போதிலும் பெரும் எண்ணிக்கையான மக்களின் அழிவுக்கு வழிகோலும் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கு ஐ.நா. மேற்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட செயற்பாடுகளோ சீர்திருத்தங்களோ அதில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கவில்லை.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு தற்காலத்தில் இருந்துவரும் அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்யும்படியாக ஐ.நா செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட உயர்மட்ட நடுவர்குழு ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையில் மக்கள் அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான பிரச்சினையை அது தனியாக அலசியுள்ளது. பாரிய மக்கள் அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் பரவலாவது பற்றி எச்சரித்துள்ள அதே சமயம், இந்த ஆயுதங்களைக் கொண்ட பயங்கரவாதம் தொடர்பாக முக்கிய அடையாளங்களை நிர்ணயித்துக் காட்டியுள்ளது. இதற்கு எதிரான தற்காப்பு நடவடிக்கைகளை ஐ.நாவும் அதன் நிபுணத்துவ முகவர் அமைபபுக்களும் மேற்கொள்ளும் வகையிலான சிபாரிசுகளையும் அது வழங்கியுள்ளது. பாரிய மக்கள் அழிவுக்கு வழிவகுக்கும் ஆயுதங்களுக்கும் பயங்கரவாதத்துக்கும் இடையிலான தொடர்புகள் இந்த அறிக்கையில் தெளிவாக நிர்ணயித்துக்காட்டப்பட்டுள்ளன.

உலகளாவிய அச்சுறுத்தல் குறைப்புக்கான முன்முயற்சிகளை நடுவர் குழு வரவேற்றுள்ளது. ஆனால், அதன் செயற்பாட்டுக் காலம் அரைவாசியாக 5 வருடங்களுக்கு குறைக்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளது.

பாதுகாப்புச் சபையின் 1540ஆவது தீர்மானத்தின் கீழ் செயற்பட்டு மிகப்பெரிய அளவில் மக்கள் அழிவை ஏற்படுத்தும் பொருள்கள் மீது நடவடிக்கை எடுக்கும் விதத்தில் மாதிரிச் சட்டங்களை இயற்றி உறுப்பு நாடுகளுக்கு வழங்கவேண்டும் என்றும் 2006ஆம் ஆண்டளவில் குறைந்தபட்ச தராதரங்களை நிலைநாட்ட உதவும் படியும் கேட்கப்பட்டுள்ளது. மேலும், 1540 ஆம் இலக்க தீர்மானத்தை செயற்படுத்தும் குழுவுக்கும் சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பு (IAEA) இரசாயன ஆயுதங்களை தடைசெய்வதற்கான நிறுவனம் (opcw) மற்றும் அணு விநியோகக் குழு (NSG) ஆகியவற்றுக்கிடையில் நிரந்தரமான இணைப்பினை ஏற்படுத்தும் படியும் அறிக்கையில் பாதுகாப்புச் சபையிடம் கேட்கப்பட்டுள்ளது.

### ஐ.நாவின் பங்கு பணி

பயங்கரவாதம் பற்றி வரையறை செய்கையில் பாரிய மக்கள் அழிவுக்கான ஆயுதங்கள் தொடர்பான பிரச்சினை தெளிவாக கருத்தில் கொள்ளப்பட்டுள்ளமை புலனாகின்றது.

இவை அனைத்துமே பாராட்டப்படக் கூடிய சிபாரிசுகளாக இருந்தபோதிலும், இநதப்பயங்கர ஆயுதங்களின் அச்சுறுத்தலை முறியடிக்கும் உலகளாவிய முயற்சிகளின் நடுநாயகமாக ஐ.நா. செயற்படும் என்றோ, இந்தச் செயற்பாட்டில் மிக முனைப்பானதோர் அமைப்பாக அது இருக்கும் என்றோ தெரிவிக்கப்படவில்லை.

உண்மையான அச்சுறுத்தலினை அடையாளம் காண்பதற்கும் ஆய்வில் வைத்திருப்பதற்கும் இந்த அச்சுறுத்தல்களுக்கு எதிரான பாதுகாப்புக்களை நிறுவுவதற்கும் இன்னும் நிறைய வேலைகள் செய்யவேண்டியிருக்கின்றது. அதைச் செய்வதற்கு கடந்த காலத்தில் ஐ.நா. சொல்லியிருப்பனவற்றையும் செய்திருப்பனவற்றையும் நாம் மீளாய்வு செய்வதாக வேண்டும்.

### செப்ரெம்பர் 11 நிகழ்வு குறித்து ஐ.நா. செயலாளர் சொன்னது

2001ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி செயலாளர் நாயகம் கொபி அனான் ஐ.நா. பொதுச்சபையில் பேசுகையில் "செப்ரெம்பர் 11ஆம் திகதி இடம்பெற்ற துன்ப நிகழ்வு இவ்வளவு மோசமாக எவ்வாறு நிகழ்ந்தது என்பதை கற்பனைசெய்தும் பார்க்கமுடியாமல் இருக்கிறது. உண்மையில் ஒரு தாக்குதலில் அணுகுண்டு அல்லது உயிரியல் ஆயுதம் சம்பந்தப்பட்டிருந்தால் பல மில்லியன் மக்களை அது கொன்று தொலைத்திருக்கும். செப்ரெம்பர் 11ஆம் திகதிய தாக்குதல்களை உலகத்தால் தடுத்துநிறுத்த முடியவில்லை. எதிர்காலத்தில் பாரிய மக்கள் அழிவை ஏற்படுத்தும் கருவிகளால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தடுக்க எம்மால் நிறையச செய்திடமுடியும்" என்று கூறியிருந்தார்.

பெரும் எண்ணிக்கையில் மக்கள் அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் பாவிக்கப்படுவதையும் அவை பரவுவதையும் தடுப்பதற்கான உலகளாவிய நியமங்களைப் பலப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். உலகளாவிய முயற்சிகள் இருட்டிப்பார்க்கப்படவேண்டும். இந்த ஆயுதங்கள் தொடர்பான ஒப்பந்தங்களை உறுதி செய்து முழுமையாக அமுலபடுத்த வேண்டும். இந்த ஆயுதங்கள் தொடர்பான சர்வதேச ஸ்தாபனங்களுக்கிடையில் ஒத்துழைப்பை மேம்படுத்தவேண்டும். இவ்வித ஆயுதங்களைத் தயாரிக்கத் தேவைப்படும் பொருள்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஏற்றுமதியாவதைத் தடைசெய்யும் சட்டங்களை மேலும் இறுக்க வேண்டும். மேற்சொன்ன ஆயுதங்கள் விநியோகமாகும் வழிகளையும் தடுக்கவேண்டும். அரசு அல்லாத குழுக்கள் அந்த ஆயுதங்களைப் பெற்றுக்கொள்வதையும் பயனபடுதது வதையும் தடைசெய்யும் சட்டங்களையும் இறுக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

### நாம் மெத்தனமாக இருக்க முடியாது

மிக அண்மையில் மட்றிட்டில் கொபி அனான் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் "அணு பயங்கரவாதமானது இப்பவும்கூட ஒரு விஞ்ஞான கற்பனைக் கதைபோலவே பார்க்கப்படுகின்றது. அப்படியானதொரு தாக்குதல் இதுவரை நடைபெறவில்லை என்பதால் நாம் மெத்தனமாக இருப்பதற்கான நியாயமாகாது. முனைபபான தற்காப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஒரு கடைசிச் சந்தர்ப்பமாக நாம் இதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்" என்று கூறியிருந்தார்.

அவர்மேலும் பேசுகையில், உயிரியல் பயங்கரவாதத்துக்கு எதிராக நாடுகளின் ஆற்றல்களை உள்ளகச் சுகாதாரம் போன்ற முன்னணி அமைப்புக்களைப் பலப்படுத்துவதின் மூலம் கட்டியெழுப்ப வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த இரண்டு கருத்துவெளிப்பாடுகளுக்கும் இடையிலான மூன்றரை வருட காலத்துக்குள் இப்பிரச்சினை வளர்ந்துள்ள அளவுக்குப் பெரும் எண்ணிக்கையான மக்களின் அழிவை ஏற்படுத்தும் ஆயுதத் தடுப்பில் ஐ.நா. பாராட்டும்படியாக செயற்பட்டிருக்கின்றது.

ஐ.நா. இந்த விடயத்தில் இன்னும் செயறதிறனுடன் ஈடுபடுவதற்கான வழிமுறைகளைக் காண்பதற்கு முன்பதாக ஐநாவின் செயற்பாடுகளையும் இப்போது இருந்துவரும் அச்சுறுத்தல்கள் பற்றிய மதிப்பீடுகளையும் சுருக்கமாகப் பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும்.

### இதுவரை ஐ.நா. என்ன செய்துள்ளது

பெரும் எண்ணிக்கையான மக்கள் அழிவை ஏற்படுத்தும் பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலானது அமெரிக்காவில் செப்ரெம்பர் 11ஆம் திகதி நடந்த தாக்குதலுக்கு முன்பிருந்தே இருந்துவரும் ஒன்றுதான். 1995ஆம ஆண்டு டோக்கியோ நகரின் உப வீதியொன்றில் நடத்தப்பட்டிருந்த விஷவாயுத் தாக்குதல் பாரிய அளவில் மக்களை பலிகொள்ளும் ஆயுதங்கள் பற்றிய எச்சரிக்கையை உலகுக்கு வழங்கியிருந்தது. இவ்வித ஆயுதங்களின் தயாரிப்புக்கு உதவக்கூடிய பொருள்கள் களவாடப்பட்ட பல சம்பவங்களும் அரசு தொழில நுட்ப நிபுணர்களாக வரக்கூடிய பலர் அரச சார்பற்ற ஆள்களால் கடத்தப்பட்டிருந்த சம்பவங்களும் இப்படியான ஆயுதங்கள் பற்றிய அச்சுறுத்தலை ஏற்கனவே, வெளிப்படுத்தியிருந்தன.

இந்த விடயம் தொடர்பாகப் பல நிபுணர்கள் விரிவாக ஏற்கனவே எழுதியிருக்கிறார்கள். இவ்வாறு நடக்காமலிருப்பதற்கான நடவடிக்கைகளை பல நாடுகளும் எடுத்துள்ளன. அமெரிக்காவின் அச்சுறுத்தல் குறைப்புத் திட்டம் அப்படியான ஒன்றே.

அணு ஆயுதப்பொருள்கள் பத்திரமாகப் பேணப்படுவது குறித்தும் முன்னாள் ஐக்கிய சோஷலிஸ சோவியத் ரஷ்ய அணு விஞ்ஞானிகளின் எதிர்காலம் பற்றியும் இந்தத்திட்டம் கவனஞ்செலுத்துகின்றது. இத்திட்டம் ஒரு செயற்பாட்டுத் திட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டத்துடன் அதனை ஜி 8 நாடுகளுக்கும் அங்கீகரித்துள்ளன. ஐ.நாவின் ஆயுதக் குறைப்பு விவகாரத் திணைக்களமானது மேற்படி நடவடிக்கைகளை தனது ஒழுங்கான ஆயவுகளுக்குள் வைத்திருந்தது. பாதுகாப்புச் சபை 1373ஆவது தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதின் மூலம் ஐ.நா. இப்பொழுது VII ஆம் அத்தியாயத்தின் கீழ் பணியாற்றுவதற்கான விரிவானதொரு கட்டமைப்பை வழங்கியுள்ளது. உறுப்பு நாடுகளின் தகுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு முதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அத்தோடு, பயங்கரவாதத்துக்கு எதிரான குழு முறையாகச் செயற்பட்டு முதல் சில வருடங்களில் ஐக்கிய ராஜ்யத்தின் நிரந்தரப் பிரதிநிதி சேர் ஜெரமி றீன்ஸ்டொக் தலைமையில் பாரிய அளவில் மக்கள் பலியாக்கப்படுவதற்கான பயங்கரவாத ஆயுதம் தொடர்பான அம்சங்களும் கவனிக்கப்பட்டுள்ளன.

2002 ஓகஸ்டில் செயலாளர் நாயகம் தமது கொள்கைச் செயற்பாட்டு குழுவின் அறிக்கையை வெளியிட்டார்.

அந்த அறிக்கையிலும் பல சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டிருந்தன. பாரிய அளவில் மக்களைக் பலியாக்கும் ஆயுதங்கள் தொடர்பாகவும் சர்வதேச அணுசக்தி முகவர் அமைபபின் தகுதிகளை தொழில்நுட்ப மட்டத்தில் அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும், இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை அறிக்கை வெளியிடப்படவேண்டும் என்பதுவும் அதில் அடங்கியிருந்தன. பெரும் எண்ணிக்கையில் மக்களைப் பலியெடுக்கும் ஆயுதங்கள பயன்படுததப்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படும் நாடுகளுக்கு உதவிகள் வழங்க உலக சுகாதார ஸ்தாபனம் தயாராக இருக்க வேண்டும் என்றும் - போதிய அளவு சிவில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதே நிறுவனங்கள் மூலம் வளர்த்தெடுக்கவும் - பராமரிக்கவும ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்றும் சிபாரசு செய்யப்பட்டிருந்தது.

விஞ்ஞானிகள் பயங்கரவாத நடவடிக்கைகளில் சம்பந்தப்படுவதை தடுக்கும் வகையில் அவர்களுக்கென ஒழுக்கநெறிகளை உருவாக்குவது குறித்துப் பாரிய மனித அழிவை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களை உருவாக்குவது பற்றிய நுட்பங்கள் பொது மக்களுக்குக் கிடைக்காமல் இருக்கச் செய்வது குறித்தும் அவைகளை உற்பத்தி செய்வதையும் களஞ்சியப்படுத்தி பாவிப்பதையும் தடைசெய்யும் நடவடிக்கைகளை எடுப்பது குறித்தும் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

இந்த விடயங்கள் தொடர்பாக, முகவர் அமைப்பு ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், இந்தச் சிபாரிசுகள் எவையும் முனைப்புடன் முன்னெடுக்கப்படாமைக்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை. பயங்கரவாதத்தை ஒழிபபதற்கான செயற்பாடுகள் பொதுவாகவும் பாரிய அளவு மக்களைப் பலியிடும் பயங்கரவாத ஆயுதங்களின் செயற்பாடுகள் குறிப்பாகவும் தீர்மானிக்கப்படும் முக்கிய இடமாக பாதுகாப்புச் சபையே இருந்து வந்துள்ளது.

### சவால்களை எதிர்நோக்கும் தகைமை மேம்படவில்லை

இந்த விடயத்தில் பயங்கரவாதத்துக்கு எதிரான குழு (CTC) தீவிரமாகவே இருந்துள்ளது. ஆனால், பெரும் எண்ணிக்கையான மக்களைக் கொல்லும் பயங்கரவாத ஆயுதங்களைத் தவிர்ப்பது மற்றும் எதிர்ப்பது தொடர்பான அரசுகளின் தகுதிப்பாடுகள் பற்றிய பகுப்பாய்வுகளை மேற்கொண்டதைத்தவிர ஐ.நாவின் அமைப்புக்குட்பட்டு, சவால்களை எதிர்நோக்கும் விதத்தில் தகைமையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை தோற்றுவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இதை மாற்றி அமைத்த பெரிய சாதனை என்னவென்றால் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதிய சாசனத்தின் VII ஆம் அதிகாரத்தின் கீழ் பாதுகாப்புச் சபை ஏற்றுக் கொண்ட 1540 ஆவது தீர்மானத்தைக் குறிப்பிடலாம். பாரிய மக்கள் அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை அரசு அல்லாத நபர்கள் அபிவிருத்தி செய்வதற்கு அல்லது பெற்றுக் கொள்வதற்கு ஆதரவளிப்பதை விரிவான அளவில் தடைசெய்வதாக இத்தீர்மானம் அமைகின்றது.

இவ்வித ஆயுதங்கள் தொடர்பான பொருள்களை பத்திரப்படுத்தி வைத்திருப்பதற்கும் அவை பரவாமல் தடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி நாடுகளை இத்தீர்மானம் வற்புறுத்துகின்றது. மிக முக்கியமாக இத்தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்கென பாதுகாப்புச் சபைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டதுடன், உறுப்பு நாடுகளிடமிருந்து தேசியக் கட்டுப்பாடு தொடர்பான பட்டியல்களுக்கும் கோரப்பட்டுள்ளன. பெரும் எண்ணிக்கையில் மக்களைக் கொல்லக் கூடிய பயங்கரவாத ஆயுதங்கள் தொடர்பாக தீர்க்கமான முடிவுகள் எடுக்கும் அதிகாரங்களை இந்தத் தீர்மானம் ஐ.நாவுக்கு வழங்குகின்றது. உறுப்பு நாடுகளுடன் சேர்ந்தும் ஐ.நா. அமைப்புக்குள்ளாகவும் செயற்பாடுகளை ஒருமைப்பாட்டுடன் முன்னெடுக்க இந்தத் தீர்மானம் கட்டமைப்பொன்றை ஏற்படுத்தியுள்ளது. இத்தீர்மானம் எவ்வளவு செயற்திறனுடன் கையாளப்பட போகின்றது. அதனை மேற்பார்வை செய்ய உருவாக்கப்பட்ட குழு எவ்வாறு செயற்படப் போகின்றது என்பதைப் பற்றியெல்லாம் பகுப்பாய்வுசெய்ய இது தருணமன்று. (ப)

*(தொடரும்)*

## மனனப் போட்டி

தொல்புரம் தமிழ்ப் பொழில் கழகத்தினால் நடத்தப்பெறும் ஆத்தி சூடி மனனப் போட்டி இன்று முதல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை காலை முதல் மாலை வரை தொல்புரம் சர்வோதய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தொல்புரம் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் இப் போட்டியில் பங்குகொள்கின்றனர். இப்போட்டியில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (3-28-ரி)

## வாழ்க வளமுடன்



19-04-2005

இல்லறமாம் இனிய சோலையிலே
இனிமையாய் வாழ்ந்து ஓராண்டினை எட்டிய
திருமண நாளாம் இந்நாளினில்
நூறாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.
ஊழியப்பாதையிலே உத்தமமாய் வழி நடந்து
உறுதியுடன் போதனைகள் பல செய்து
பக்தி வைராக்கியத்தில் வழி நடக்கும்
எம் இனிய போதகரே!
எல்லையற்ற ஆசீர்வாதங்கள் - பெற்று
என்றுமே வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்!

திரு. திருமதி
**அருள்ராஜா தம்பதிகள்**
(போதகர். அடைக்கல கூடார சபை குருநகர்)

"உனக்குப் பாக்கியமும்
நன்மையும் உண்டாயிருக்கும்"
சங்: 128: 2

வாழ்த்துவோர்:
திரு. திருமதி அருள்நேசன், மீரா
குடும்பத்தினர்.

(44300)(54-16-34-42)

## சுழிபுரத்தில் திருவாசக முற்றோதல்

சுழிபுரம்,ஏப்.19

சுழிபுரம் அறுபத்துமூவர் குருபூசை மடாலயத்தில கடந்த புதன்கிழமை முதல் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வு நடைபெற்று வருகின்றது.

தினமும் காலை ஏழு மணி முதல் பிற்பகல ஐந்து மணிவரை ஒவ்வொரு திருமுறை படிக்கப்பட்டு வருகினறது.

தொடர்ந்து பன்னிரண்டாவது நாளான எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்றோதல் பூர்த்தி செய்யப்படும்.

இந்த நிகழ்வு திருமுறைத் தொண்டர் ந.சிவரஞ்சன் தலைமையில் நடைபெற்று வருகின்றது. இதில் பலர் கலந்து திருமுறை ஓதி வருகின்றனர். சுழிபுரத்தில் சித்திரை மாதத்தில் பல்நெடும்காலமாக இந்த முற்றும் ஓதுதல் நிகழ்வு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். (3-28)

## ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு ஒன்றை பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்துக்கு அனுப்புங்கள்!

### தமிழ்ச்செல்வன் டப்ளினில் வலியுறுத்து

கொழும்பு,ஏப்.19

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்துக்கு அனுப்பிச் சேதங்களை மதிப்பீடு செய்ய முயற்சிக்க வேண்டும் என்று கோரியுள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரும் பொருளாதார, நாணய விவகாரக்குழு மற்றும அபிவிருத்திக் குழு ஆகியவற்றின் உறுப்பினருமான இயோர் ரயனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின்போது அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

டப்ளினில் அயர்லாந்து நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தமிழர் தாயகத்தில் ஆழிப்பேரலையால் மக்கள் எதிர்கொண்டுள்ள மனிதாபிமான நெருக்கடிகள் குறித்தும் அதிலிருந்து மக்களைக் காப்பாற்றி மீள்கட்டுமானத்தை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்புப் பற்றியும் சு.ப.தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

பொதுக்கட்டமைப்பு ஆக்கபூர்வமானதாகவும் சர்வதேசத்தின் உதவியை பாரபட்சமற்ற நேர்மையான முறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கக்கூடிய வகையிலும் அமைவது முக்கியமானது என அவர் வலியுறுத்தினார்.

இதைச் செய்து காட்டுவதில் இலங்கை அரசு எடுக்கும் சரியான நடவடிக்கையில் அதன் நன்மதிப்பையும் நேர்மைத் தன்மையையும் அதனோடு பேச்சுமூலம் தமிழர் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதற்குள்ள எண்ணத்தையும் வெளிப்படுத்தும் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரிடம் கூறினார்.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் குழுவைப் பாதிக்கப்பட்ட தமிழர் பிரதேசங்களுக்கு அனுப்பிவைத்து சேதங்களை மதிப்பீடு செய்ய முயற்சிக்கவேண்டும். அத்துடன், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கும் யுத்த நிறுத்த உடன்படிககையை நடைமுறைப்படுத்துவதற்காகவும் விடுதலைப் புலிகள் மேறகொண்ட விட்டுக்கொடுப்புக்களையும் அக்குழுவினர் காணமுடியும் என்றும் -

சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (க-3)


# சளைக்காத சக்தியும் அசுர பலமும்

BLACK & DECKER
DEWALT
High Performance Industrial Tools

தச்சுவேலைக்கும் இரும்பு வேலை மற்றும் வீடமைப்பு வேலைகளுக்கும்

## பிளெக் அன்ட் டெக்கர் மற்றும் டிவோல்ட் மின் சக்திக் கருவிகள் ஏராளம்



டெல்மேஜ் 6 மாத உத்தரவாதப் பத்திரம்

சமமான 12 தவணைகளில் செலுத்தக் கூடிய இலகு தவண முறையுடன்

இப்பொழுது நாடு முழுவதிலுமுள்ள விற்பனை முகவர்களிடமும்

டெல்மேஜ் காட்சியறைகளிலும்

| கொழும்பு | மொரட்டுவை | குருணாகல் | அக்குரஸ்ஸ | அனுராதபுரம் |
|---|---|---|---|---|
| 482/1A, டி. பி. ஜயா மாவத்தை | 192A, டி சொய்சா வீதி. | 137, புத்தளம் வீதி. | 121A, தெனியாய வீதி | 92, பாங்க் பிளேஸ் |
| கொழும்பு 10. | மொரட்டுமுல்ல, மொரட்டுவை | குருணாகல் | அக்குரஸ்ஸ | அனுராதபுரம் |
| தொ.பே: 2665913 | தொ. பே: 2654603 | தொ. பே: 037-2234386 | தொ. பே: 041-2283322 | தொ. பே: 025-226371 |

DELGRAPHICS

நிகரற்ற பலம் - நேர்த்திமிகு வேலை


## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 28 - 10 - 1947

ஆண்டவன் அடியில் 19 - 04 - 1996

அமரர்

### சீவரத்தினம் சிவசுப்பிரமணியம்

(யா/கட்டடத் திணைக்களம். யாழ்ப்பாணம்.)

*அன்புத் தெய்வமே கொடிய காலனால் எம்மிடம் இருந்து*
*பிரித்தெடுத்த இந்நாளை நினைவு கூருகின்றோம்.*
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கைதடி நுணாவில்,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(44219)(46-16-34-42)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 19 - 06 - 1925

இறப்பு 06 - 03 - 2005

### இராமு ஆனந்தசுந்தரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நல்லாசனாய் நல்லதோர் குடும்பத் தலைவனாய்
நன்றாகவே வாழ்ந்த அன்புத் தெய்வமே! அப்பா!!
பின்னாளில் இன்னல் சில கண்டு
இறைவனடி சேர்ந்தீர்களோ அப்பா?
என்றும் உங்களை மறவோம் அப்பா!

இன்று (19-04-2005) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

- குடும்பத்தினர்.

(44373)(42-16-34)

## யாழ்.பாடசாலைகள் கிரிக்கெட்

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் மாவட்டச் சம்பியனாகத் தெரிவு

கரவெட்டி,ஏப்.19

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையில்- 19 வயது அணிகளுக்கிடையில்- நடத்தப்பட்டு வந்த மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வெற்றிபெற்றுச் சம்பியனானது.

கடந்த சனிக்கிழமை நடந்த அரையிறுதி ஆட்டங்களில் இறுதியாட்டத்துக்குத் தெரிவான உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் மோதின.

இந்த ஆட்டத்தில் 20 ஓட்டங்களால் வெற்றி பெற்று, யாழ்.மாவட்டச் சம்பியனாகத் தெரிவானது உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி. இரண்டாம் இடத்தை விக்னேஸ்வராக் கல்லூரி பெற்றது. இந்த ஆட்டத்துக்கு பா.சசிகரனும் சி.வர்மனும் நடுவர்களாகப் பணியாற்றினர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து வலயங்களிலும் நடத்தப்பட்ட போட்டிகளில் முதலிரு இடங்களைப் பெற்ற பாடசாலைகள் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்கு பற்றியிருந்தன. மாவட்ட மட்டத்தில் தெரிவான இரு அணிகளும் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றின. (3-70)

## பூப்பந்தாட்டத்தில் உடுவில் மான்ஸ் முதலிடம்

வலிகாமம், ஏப்.19

வலிகாமம் கல்வி வலயத்தில் நடைபெற்ற பாடசாலை அணிகளுக்கிடையிலான பூப்பந்தாட்ட போட்டிகளில் ஆண்கள், பெண்கள் ஆகிய இருபிரிவு போட்டிகளிலும் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய அணியினர் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

முதலாமிடம் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம், மூன்றாம் இடம் மானிப்பாய் இந்துக்கல்லூரி.

**பெண்கள் பிரிவு**

முதலாம் இடம் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி. (த-152)

## விளையாட்டு

## யாழ்.பிரதேச செயலக உதைபந்தாட்டம்: நாவாந்துறை கலைவாணி வெற்றி

யாழ்ப்பாணம்,ஏப்.19

யாழ்.பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

யாழ்.பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டு கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. கலைவாணி விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

கலைவாணி விளையாட்டுக்கழக வீரர் ததயாரூபன் தனது அணிக்கான கோலை பெற்றுக் கொடுத்தார்.

இப்போட்டிக்கு மத்தியஸ்தராக எஸ்.நொலேஸ்கோ, என்.விஜயஆனந்தன், கு.பிரபாகரன் ஆகியோர் கடமையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மடத்தடி இருதயநாதர் வட்டபிளை விளையாட்டுக்கழகம் மோதியது.

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுகழக அணி 9-0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக வீரர்களான எ.டைமன் ஒரு கோலையும், எ.அலெக்ஸ ஒரு கோலையும் தெ.ஜெய்வின் 3 கோலையும் வி.றுவோஸ் 3 கோலையும் போட்டனர்.

இப்போட்டிக்கு மத்தியஸ்தராக ரி.சுரேத்திரன், என்.விஜயஆனந்தன், கு.பிரபாகரன் ஆகியோர் கடமையாற்றினர். (3-190)

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.19

உரும்பிராய் லயன்ஸ் கழகம் கோப்பாய் முத்தமிழ் விளையாட்டுக் கழகத்துக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

நேற்றுமுன்தினம் நீர்வேலி அரசியல்துறை அலுவலத்தில் வைத்து இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

விளையாட்டுக்கழகங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் கோப்பாய் பிரதேச அரசியல் துறையின் ஏற்பாடடில் தேசிய எழுச்சிப் பேரவையினால் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுகிறது.

ஏனைய விளையாட்டுக் கழகங்களுக்கும் கட்டம் கட்டமாக விளையாட்டு உபகரணங்கள் பெற்றுக்கொடுக்கப்படவிருப்பதாகக் கோப்பாய்ப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் இணைப்பாளர் தி.பிரதாப் தெரிவித்தார்.(த-7)



யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

அஞ்சல் ஓட்ட நிகழ்ச்சியில் மாணவர்கள் உற்சாகத்துடன் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம். (படம் - குருநகர்ச் செய்தியாளர்)

# வடமராட்சி கல்வி வலயத்தின் மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

கரவெட்டி, ஏப்.19

**வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் மெய்வன்மைப் போட்டிகளில் 17 வயது, 19 வயது ஆகிய பிரிவுகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:- (நேற்றைய தொடர்ச்சி)**

### 17வயதுப் பிரிவு

### ஆண்கள்

**100 மீற்றர்** - இ.நிருஷாந் (நெல்லியடி ம.ம.வித்), அ.நெல்சன் (வேலாயுதம் ம.வித்.), ரா.சிந்துஜன் (உடுப்பிட்டி அ.மி.க).

**200 மீற்றர்** - இ.நிருஷாந் (நெல்லியடி ம.ம. வித்.), அ.நெல்சன் (வேலாயுதம் ம.வித்.), ரா.சிந்துஜன் (உடுப்பிட்டி அ.மி.க).

**400 மீற்றர்** - இ.நிருஷாந் (நெல்லியடி ம.ம.வித்), வி.நிரோஜன் (கணவராய் பொன்னம்பலம் ம.வித்), இ.கார்த்திக் (ஹாட்லிக் கல்லூரி).

**800 மீற்றர்** - த.முகுந்தன் (ஹாட்லிக்கல்லூரி), கு.குலசிதரன் (தும்பளை சிவப்பிரகாசம் வித்.), அ.விமல்ராஜ் (உடுப்பிட்டி அ.மி.க).

**1500 மீற்றர்** - ர.ரகுலன் (தொண்டைமானாறு ம.வித்.), த.முருகதாஸ் (ஹாட்லிக் கல்லூரி), ப.ராஜேஸ்வரன் (வேலாயுதம் ம.வித்.).

**110 மீற்றர் தடைதாணடல்** - இ.டிலக்சன் (ஹாட்லிக்கல்லூரி), அ.விமல்ராஜ் (உடுப்பிட்டி அ.மி.க), மு.தர்சிகன் (தேவரையாளி இந்துக் கல்லூரி).

**நீளம்பாய்தல்** - மா.நிரோஷன் (நெல்லியடி ம.வித்.), க.ஜெயதர்சன் (ஹாட்லிக்கல்லூரி), த.கோகுலன் (ஹாட்லிக்கல்லூரி).

**உயரம்பாய்தல்** - மா.மணிவர்ணன் (உடுப்பிட்டி அ.மி.க.), இ.டிலக்ஷன் (ஹாட்லிக் கல்லூரி), ர.குருசாத் (பொலிகண்டி இ.த.க.).

**முப்பாய்ச்சல்** - மா.நிரோஜன் (நெல்லியடி ம.ம.வித்), அ.மகிர்தன் (இமையாணன் அ.த.க.), ரா.சிந்துஜன் (உடுப்பிட்டி அ.மி.க).

**குண்டெறிதல்** - கு.விஜிதரன் (கொற்றாவத்தை அ.மி.த.க), தி.ஜெகதீஸ்வரன் (கொற்றாவத்தை அ.மி.த.க.), ஜெ.சங்கீதன் (ஹாட்லிக்கல்லூரி).

**தட்டெறிதல்** - ச.கரிதரன் (ஹாட்லிக்கல்லூரி), தெ.சுகந்தன் (தும்பளை சிவப்பிரகாச வித்.), அ.கெமன்ராஜ் (நெல்லியடி ம.ம.வித்).

**ஈட்டியெறிதல்** - த.முகுந்தன் (ஹாட்லிக் கல்லூரி), கு.விஜிதரன் (கொற்றாவத்தை அ.மி.த.க.).

**கோல் ஊன்றிப்பாய்தல்** - தெ.சுகந்தன் (தும்பளை சிவப்பிரகாச வித்.), சு.ஜனார்த்தனன் (உடுப்பிட்டி அ.மி.க.).

**4X100 அஞ்சல்** - நெல்லியடி ம.ம.வித்., உடுப்பிட்டி அ.மி.க., வேலாயுதம் ம.வித்.

**4X400 அஞ்சல்** - நெல்லியடி ம.ம.வித்., உடுப்பிட்டி அ.மி.க., ஹாட்லிக்கல்லூரி.

### பெண்கள்

**100 மீற்றர்** - சு.அஞ்சுகா (கரணவாய் ம.வித்.), நமயூரி (உடுப்பிட்டி மகளிர்), உ.ரோகினி (வல்வை மகளிர் ம.வித்.).

**200 மீற்றர்** - ந.மயூரி (உடுப்பிட்டி மகளிர்), ஜெ.லர்ஜினி (வல்வை சிவகுரு வித்.), உ.ரோகினி (வல்வை மகளிர் ம.வித்.).

**400 மீற்றர்** - ஜெ.லர்ஜினி (வல்வை சிவகுரு வித்.), அ.அஜிதா (உடுப்பிட்டி மகளிர்), உ.நிருத்திகா (விக்னேஸ்வரா கல்லூரி).

**800 மீற்றர்** - இ.றொஷானி (வட இந்து மகளிர் கல்லூரி), ஜெ.லர்ஜினி (வல்வை சிவகுரு வத்), கி.கிருபாநந்தினி (வட இந்த மகளிர் கல்லூரி),

**1,500 மீற்றர்** - இ.றொஷானி (வட இந்து மகளிர் கல்லூரி), கி.கிருபாநந்தினி (வட இந்து மகளிர் கல்லூரி), பே.நிவேதினி (மொதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**100 மீற்றர் தடைதாண்டல்** - சி.கவிப்பிரியா (பொலிகண்டி இ.த.க.), அ.அஜிதா (உடுப்பிட்டி மகளிர்), த.கிருசாந்தி (உடுப்பிட்டி மகளிர்).

**நீளம் பாய்தல்** - ந.மயூரி (உடுப்பிட்டி மகளிர்), த.பார்த்திபா (மொதடிஸ்த பெ.உ. பாடசாலை), ப.பகீரதி (உடுப்பிட்டி மகளிர்).

**உயரம் பாய்தல்** - க.கஸ்தூரி (வட இந்து மகளிர் கல்லூரி), சி.கவிப்பிரியா (பொலிகண்டி இ.த.க.), ஸ்ரீ.சுகன்யா (வல்வை மகளிர் ம.வித்.).

**குண்டு எறிதல்** - ஆ.சுகந்தினி (வட இந்து மகளிர் கல்லூரி), சிபிரண்யா (உடுப்பிட்டி அமிக.), யோ.யோகானந்தி (மொதடிஸ்த பெ.உ. பாடசாலை).

**தட்டெறிதல்** - இ.திவிஷா (உடுப்பிட்டி மகளிர்), சி.பிரண்யா (உடுப்பிட்டி அ.மி.க.), கஸ்தூரி (விக்னேஸ்வராக் கல்லூரி).

**ஈட்டி எறிதல்** - க.கஸ்தூரி (விக்னேஸ்வரா கல்லூரி), த.ரேணுகா (சிதம்பரா கல்லூரி), யோ.யோகானந்த (மெதடிஸ்த பெ.உ. பாடசாலை).

**4X100 அஞ்சல்** - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மெதடிஸ்த பெ.உ.பாடசாலை, கரணவாய் ம.வித்.

**4X400 அஞ்சல்** - வட இந்து மகளிர் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர்கல்லூரி, மெதடிஸ்த பெ.உ. பாடசாலை.

### 19 வயதுப் பிரிவு

### ஆண்கள்

**100 மீற்றர்** - க.முரளீதரன் (நெல்லியடி ம.ம.வித்), அ.அலஸ்ரன் கிசோக் (ஹாட்லிக் கல்லூரி), சி.ஜனகன் (நெல்லியடி ம.ம.வித்.).

**200 மீற்றர்** - அ.அலஸ்ரன் கிசோக் (ஹாட்லிக் கல்லூரி), க.முரளீதரன் (நெல்லியடி ம.ம.வித்.), சி.ஜனகன் (நெல்லியடி ம.ம.வித்.), தெ.இந்திரகுமார் (ஹாட்லிக்கல்லூரி).

**400 மீற்றர்** - சி.சிவசுகிர்தன் (நெல்லியடி ம.ம.வித்.), சி.ஜனகன் (நெல்லியடி ம.ம.வித்.), தெ.இந்திரகுமார் (ஹாட்லிக்கல்லூரி).

**800 மீற்றர்** - சி.சிவசுகிர்தன் (நெல்லியடி ம.ம.வித்.), தெ.இந்திரகுமார் (ஹாட்லிக் கல்லூரி), ம.சந்திரகுமார் (நெல்லியடி ம.ம.வித்.).

**1500 மீற்றர்** - சி.சிவசுகிர்தன் (நெல்லியடி ம.ம.வித்.), சி.நிஷாந்தன் (ஹாட்லிக் கல்லூரி), க.இரத்தினாகரன் (நெல்லியடி ம.ம.வித்.).

**5000 மீற்றர்** - க.இரத்தினாகரன் (நெல்லியடி ம.ம.வித்.), பா.பிரபாகரன் (ஞானாசிரியார் கல்லூரி), சி.நிஷாந்தன் (ஹாட்லிக் கல்லூரி).

**110 மீற்றர் தடைதாண்டல்** - அ.அமலராஜ் (விக்னேஸ்வரா கல்லூரி), செ.கோபிநாத் (விக்னேஸவராக்கல்லூரி), சி.அபிரன் (சிவப்பிரகாசவித்.).

**400 மீற்றர் தடைதாண்டல்** - செ.கோபிநாத் (விக்னேஸ்வராக்கல்லூரி), தபிரபு (உடுப்பிட்டி அமிக).

**நீளம் பாய்தல்** - அ.சுமேதன் (ஹாட்லிக் கல்லூரி), செ.சன்சயன் (தேவரையாளி இந்து), ந.கஜேந்திரன் (இமையாணன் அ.த.க.).

**உயரம் பாய்தல்** - ச.சந்திரமோகன் (ஞானாசாரியார் கல்லூரி), அ.ஜெயதீபன் (பொலிகண்டி இ.த.க.), சி.அச்சுதன் (ஹாட்லிச் கல்லூரி), அஜீவராஜ் (தேவரையாளி இ.த.க.).

**முப்பாய்ச்சல்** - ந.கஜேந்திரன் (இமையாணன் அ.த.க.), அ.சுமேதன் (ஹாட்லிக்கல்லூரி), ஆ.துஸ்யந்தன் (விக்னேஸ்வராக் கல்லூரி).

**கோல் ஊன்றிப்பாய்தல்** - மு.கிருஷாந் (தேவரையாளி இந்துக்கல்லூரி), தெ.இந்துகான் (இமையாணன் அ.த.க.), ஜெ.ஜீவா (ஹாட்லிக் கல்லூரி).

**குண்டெறிதல்** - ப.செல்வகாந்தன் (உடுப்பிட்டி அ.மி.க.), ச.நவராஜ் (ஹாட்லிக் கல்லூரி), செ.சுதர்சன் (ஹாட்லிக் கல்லூரி).

**தட்டெறிதல்** - செ.சுதர்சன் (ஹாட்லிக் கல்லூரி), கு.ஆதித்தன் (நெல்லியடி ம.ம.வித்.), ம.வாசுதேவன் (நெல்லியடி ம.ம.வித்.).

**ஈட்டியெறிதல்** - செ.சுதர்சன் (ஹாட்லிக் கல்லூரி), ப.செல்வகாந்தன் (உடுப்பிட்டி அ.மி.க.), கு.ஆதித்தன் (நெல்லியடி ம.ம.வித்.).

**4X100 அஞ்சல்** - ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி ம.ம.வித், இமையாணன் அ.த.க.

**4X400 அஞ்சல்** - நெல்லியடி ம.ம.வித், இமையாணன் அ.த.க., தும்பளை சிவப்பிரகாச வித்.

### பெண்கள்

**100 மீற்றர்** - ந.துவாரகா (வடமராட்சி ம.ம. கல்லூரி), ம.குருப்பிரியா (வடமராட்சி ம.ம.கல்லூரி), இ.மேரிதர்சினி (அல்வாய் வடக்கு றோ.க)

**200 மீற்றர்** - ந.துவாரகா (வடமராட்சி ம.ம. கல்லூரி), இமேரிதர்சினி (அல்வாய் வடக்கு றோ.க.), த.உதயராணி (வட இந்து மகளிர் கல்லூரி).

**400 மீற்றர்** - செ.குமுதினி (வட இந்து மகளிர் கல்லூரி), ம.குருப்பிரியா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), வி.இராஜகங்கா (வல்வை இந்து தமிழ் கலவன் பாடசாலை),

**800 மீற்றர்** - தெ.ஜெயரூபி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), சிநிசா (ஞானசாரியார் கல்லூரி), பா.சுதேஜனா (வட.இந்து மகளிர் கல்லூரி).

**1,500 மீற்றர்** - தெ.ஜெயரூபி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), க.மாலினி (ஞானசாரியார் கல்லூரி), பா.சுதேஜனா (வட இந்து மகளிர் கல்லூரி).

**3,000 மீற்றர்** - பா.சுதேஜனா (வட இந்து மகளிர் கல்லூரி), ஜெ.ஜெயப்பிரியா (விக்னேஸ்வராக் கல்லூரி), வி.சாலினி (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை).

**100 மீற்றர் தடை தாண்டல்** - இ.அகலியா (மெதடிஸ்த பெ.உ.பாடசாலை), கு.மேகலா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), தெ.ஜெயரூபி (வடமராட்சி மத்தியமகளிர் கல்லூரி).

**400 மீற்றர் தடைதாண்டல்** - இ.அகலியா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை).

**நீளம் பாய்தல்** - ம.குருப்பிரியா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), தெ.மீரா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை), சி.மேரிதர்சினி (அல்வாய் வடக்கு றோ.க.).

**உயரம் பாய்தல்**- செ.குமுதினி (வட இந்து மகளிர் கல்லூரி), வ.உஷாளினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இ.அகலியா (மெதஸ்த பெண்கள் உ.பாடசாலை),

**குண்டெறிதல்** - ச.அகல்யா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை), நதர்ஜிகா (விக்னேஸ்வராக் கல்லூரி), சா.சாந்தி (உடுப்பிட்ட அ.மி.க.).

**தட்டெறிதல்** - பு.ஜெனிட்டி (நெல்லியடி ம.ம.வித்.), த.அபிராமி (நெல்லியடி ம.ம.வித்.), ந.தர்ஜிகா (விக்னேஸ்வராக்கல்லூரி),

**ஈட்டியெறிதல்** - இ.அகலியா (மெதடிஸ்த பெ.உ.பாடசாலை), ந.தர்ஜிகா (விக்னேஸ்வராக் கலலூரி), செரீஜா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**4X100 அஞ்சல்** - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி ம.ம.வித்., வட இந்து மகளிர் கல்லூரி,

**4X400 அஞ்சல்** - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, விக்கினேஸ்வராக் கல்லூரி. (3-70-203)

*(வளரும்)*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வான் விற்பனைக்கு

60.... தொடர் இலக்கம் கொண்ட ஹைஏர்ஸ் வான் மொடல் LH41 (பாடசாலைச் சேவைக்கு உகந்த வான்) விற்பனைக்குண்டு. தொடர்பு: N.குகேந்திரன் (மெக்கானிக்), 6, சென்.ஆன்ஸ் லேன், பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். (44330)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1969ஆம் ஆண்டு பிறந்த மகம் நட்சத்திரம் 8இல் செவ்வாய் கிரகபாவம் 93 பிரான்சில் PR உடைய மண மகனுக்கு அழகிய கல்வியறிவுடைய மணமகள் உடன் தேவை. ஜாதக விவரங்களுடன் தொடர்பு: மே/பா உதயன் விளம்பர இல. 2559 யாழ்ப்பாணம். (சி/42346)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1980 ஆம் ஆண்டு பிறந்த பூரட்டாதி நட்சத்திரம் 7இல் செவ்வாய், கிரகபாவம் 80 உடைய மணமகளுக்கு ஏற்ற மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: விளம்பர இல. 2560 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (44390)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யா திருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடிய வர்கள், சீதனம் கொடுக்க வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம விரும்பி ஏற்கும் ஆண்கள் எங்களிடம் வெளி நாட்டு ஜாதகங்கள் உள்ளன. நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமண மாலை, இல.289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207 (43302)

## கைமாறிவிட்டது

16.04.2005 சனிக்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தனியார் செகுசு பஸ்ஸில் பயணம் செய்த ஒருவரின் பயணப்பை கைமாறி எடுக்கப்பட்டுள்ளது. மாறி எடுத்தவர்கள் 021 222 2298 அல்லது 077 6197841 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (44386)

## தவறிவிட்டது

கட்டுவனைச் சேர்ந்த செல்லத்துரை செல்வேந்திரமணி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.465590378V) முக மாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். நா.காசிப் பிள்ளை, பலாலி றோட், உரும்பிராய். (இந்துக கல்லூரி அருகில்) T.P. 077 6544697.(44384)

## உடுபுடைவைகள் கையளிப்பு

வடமராட்சி,ஏப்.19

கரணவாய் அண்ணா சிலையடி வள்ளுவர் சனசமூக நிலையத்தினரால் அண்ணா சிலையடி யையும் அதன் சுற்றுப் பகுதியையும் சேர்ந்த 190 குடும்பங்களுக்கு உடுபுடைவைகளும் ஆண்டு 1 முதல் 13 வரை கல்வி பயிலும் சகல மாணவர்களுக்கும் கல்வி உபகரணங் களும் வழங்கப்பட்டன.

அகில இலங்கை 'சைவன்' நற்பணி மன்றத தின் ஏற்பாட்டில் மன்றத்தின் செயலாளர் இ. நாகேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இப்பொருள்கள் வழங்கும் வைபவத்தில், சுவாமி சித்ரூபானந்தா, 'சைவன்' சிறுவர் மன்றத்தின் தலைவர் நா.வினோத், யாழ்.மாவட்ட உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ.சுப்பிர மணியம், பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்கிளை முகாமையாளர் மா.பரமானந்தம், கிராம சேவையாளர் ப.குமரேசன் ஆகியோர் கலந்துகொண்டு உடுபுடைவைகளையும், கற்றல உபகரணங்களையும் கையளித்தனர். (த-173)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

நெடுந்தீவு,ஏப்.19

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவின் மாதாந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரச அதிபர் எம். பற்றிக் டிறைஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது. (த-112)

## முதலுதவிப் பெட்டி அன்பளிப்பு

நெடுந்தீவு,ஏப்.19

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுக் கிளையினால் நெடுந்தீவின் கடல் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வரும் குமுதினிப் படகில் பொருத்துவதற்காக முதலுதவிப்பெட்டி ஒன்று வழங்கப்பட்டுள் ளது. (த-112)

## விற்பனைக்கு

காது கேட்கும் கருவி (GN.Resound) காதுக்குள் பொருத்தக் கூடியது (புதியது). உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

(44393) T.P. 0777 222249 (32-21-11-17)

## போக்குவரத்து நிர்வாக உத்தியோகத்தர்

பல வாகனங்களைக் கொண்ட போக்குவரத்துப் பிரிவை மேற்பார்வை செய்ய, மோட்டார் வாகனங்கள் தொடர்பான நிறைந்த அனுபவமிக்க போக்குவரத்து நிர்வாக உத்தியோகத்தர் தேவை. எல்லா வகைகளையும் சேர்ந்த வாகனங்கள் எம்மிடம் உண்டு.

வாகனங்களைப் பராமரித்தல், சீரான நிலையில் வைத் திருத்தல், அவற்றில் காணப்படும் குறைகளைக் கண்ட றிந்து உடனுக்குடன் செயலாற்றுதல் ஆகிய தகுதிகள் அத்தி யாவசியம்.

விண்ணப்பதாரர் தமது முன் அனுபவங்கள் குறித்த சான்றிதழ்களுடன் விண்ணப்பத்தை 25.04.2005இற்கு முன்னர் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**எஸ்.லோன் விநியோக நிலையம்**

(C/42370) 23/1. பிறவுன் வீதி. யாழ்ப்பாணம். (24-11-17-21)

## குடும்ப/ பொது உளவளத்துணையாளருக்கான பயிற்சி நெறி

1. மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. பயிற்சிக்காலம் / ஒரு வருடம்
   பயிற்சி நாள்கள் சனி,ஞாயிறு காலை மு.ப.9.00 / பி.ப 2.00 மணி வரை
3. கல்வித் தகைமை க.பொ.த.உயர்தரம் சித்தி, சமூகசேவை, உளவியல் நாட்டம்.
4. பயிற்சிக் கட்டணம் 7500/=

**சுயவிவரங்களடங்கிய விண்ணப்பப்படிவத்தை 30.04.2005 இற்கு முன்**

இயக்குநர்,
அகவொளி,
குடும்ப வளத்துணை நிலையம்,
சென்.பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு நேரில் அல்லது அஞ்சலில் அனுப்பிவைக்கவும்.

\- இயக்குநர்.

(44395)(21-11-17)

## வெளிவந்துவிட்டன!

2005 புதிய பாடத்திட்டத்துக்குரிய

◇ குடியுரிமைக் கல்வி - தரம் 7 -
ஆக்கம்: செல்வி மனோகரி முத்துலிங்கம் (B.A. Hons)
\- அரசறிவியல் ஆசிரியை -

◇ வரலாறு - தரம் 7-
ஆக்கம்: ம.சிவரூபன் (B.A. Hons)

◇ புவியியல் - தரம் 7-
ஆக்கம்: செல்வி ராதா அம்பலவாணர் (B.A., Dip. in Edu.)

வெளியீடு: **ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**
235, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி-42364)(29-11-17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**திருமதி வயிரமுத்து செல்லம்மா**

(சங்கானை)

மலர்வு 10-08-1922 — உதிர்வு 20-03-2005

எங்கள் அன்புத் தெய்வம் எம்மைவிட்டுப் பிரிந்த வேளையில் உடன் ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் சொல்லி, பல்வேறு உதவிகள் செய்த உற்றார், உறவினர்,நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (19-04-2005) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை, வீட்டுக்கிருத்தியம் ஆகிய நிகழ்வுகளில் கலந்துகொள்வதோடு, தொடர்ந்து இடம்பெறுகின்ற மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

\- குடும்பத்தினர்.

வட.கிருஷ்ணதாசன்(மகன்)
(மதுவாளச்சாலை, சங்கானை),
குளத்தடி வீதி, சங்கானை,

(C/42372)(46-11-17-21)

## 80ஆவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



இன்று (19.04.2005) செவ்வாய்க்கிழமை சுன்னாகம், உடுவில், காளிகோயிலடியைச் சேர்ந்த எமது அன்பு அன்னை

**திருமதி தம்பிஐயா தங்கம்மா**

அவர்களின் 80 ஆவது பிறந்தநாளில்அவர் காளி அம்மன் அருள்பெற்று நீண்டகாலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



**திருமதி அன்னம்மா கந்தையாபிள்ளை**

தோற்றம் 24-10-1923 — மறைவு 20-03-2005

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (19.04.2005) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்றன.

அந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற் றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின் றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கணக்கனார் கண்டி, காரைநகர்.

(C\42369)(50-11-17)

## மரண அறிவித்தல்



**கணபதிப்பிள்ளை முருகேசம்பிள்ளை**

(M.Sc., Ph.D)

(பௌதிகவியல் துறை ஆராய்ச்சியாளர் - ஜேர்மனி)

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஜேர்மனியில் பௌதிகவியல் துறை ஆராய்ச்சியாளராகப் பணி புரிந்து கொண்டிருந்தவரும் யாழ்.பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம் ஆகியவற்றின் முன்னாள் விரிவுரையாளரு மான கணபதிப்பிள்ளை முருகேசம்பிள்ளை (09.04.2005) சனிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-தங்கம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், ஈவாவின் (Germany) அன்புக் கணவரும் நடராஜசுந்தரம் (Holland), இராஜேஸ்வரி (ராணி), Dr.இராஜரட்ணம் (மோகன்-London) ஆகி யோரின் அன்புச் சகோதரரும் அனுஷியா (Holland), அற்பு தானந்தன்(News Editor, Virakesari Weekly) Dr.கௌசல்யா (London) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜனார்த்தனன் (Holland), ஜெகதர்ஷன் (Holland), துஷான் (London) ஆகியோ ரின் பாசமிகு பெரியப்பாவும் அகல்யாவின் அன்பு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-04-2005) செவ்வாய்க் கிழமை ஜேர்மனி நேரப்படி காலை 8.30 மணிக்கு Linden STR-20A, (Traisa), 64367 Muhltal, Germany இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி அற்புதானந்தன் இராஜேஸ்வரி (சகோதரி).

இந்திரன் அம்மன் கோயிலடி,
துன்னாலை, கரவெட்டி. (44389)(21-11-17)

# 265ஆவது பாப்பரசருக்கான வாக்கெடுப்பு நேற்றிரவு கிங்ஸ்ரைன் தேவாலயத்தில்!


வாக்கெடுப்பு ஆரம்பிப்பதற்கு முன்பாக கிங்ஸ்ரைன் தேவாலயத்தில் நேற்று நடத்தப்பட்ட பிரார்த்தனையின் போது...

வத்திக்கான், ஏப்.19

உலகம் முழுவதுமுள்ள 110 கோடி கத்தோலிக்கர்களுடைய சமயத் தலைவரை, 265ஆவது புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு நேற்றிரவு ஆரம்பமானது.

புதிய பாப்பரசரைத் தேர்தெடுப்பதற்காக 52 நாடுகளைச் சேர்ந்த 115 கர்தினால்கள் ஒன்றுகூடி இதற்கு முன் ஆலோசனை செய்துள்ளனர். வாக்கெடுப்பு மூலம் புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நேற்றிரவு ஆரம்பிக்கப்பட்டது. இத்தேர்தலை மூன்று நாள்களுக்குள் நிறைவுக்கு கொண்டுவர கர்தினால்கள் தீர்மானித்துள்ளனர் என வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வத்திகான் சென். பீற்றர்ஸ் தேவாலய வளாகத்தில் உள்ள கிங்ஸ்ரைன் தேவாலயத்தின் பூட்டிய அறைக்குள்ளேயே இந்த இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும், பாதுகாப்புக் கருதி கிங்ஸ்ரைன் தேவாலய பூட்டிய அறையினுள் ஒட்டுக்கேட்கும் கருவிகளைச் செயலிழக்கச் செய்யும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

கர்தினால்கள் வாக்கெடுப்பு நடைபெறும் அறைக்குள் செல்வதற்கு முன்னர், தேர்தலின்போது நடக்கும் நிகழ்ச்சிகளை வெளியே சொல்லமாட்டோம் என உறுதிமொழி எடுத்துக்கொண்டனர் என்றும் -

1968ஆம் ஆண்டு பாப்பரசர் 10ஆம் கிரகோரியைத் தேர்ந்தெடுக்கும் வாக்கெடுப்பில் சிக்கல் ஏற்பட்டதனால் அந்தத் தேர்வு 33 மாதங்கள் வரை நீடிக்க அவ்வாறான நிலைமைகள் ஏற்படாது செயற்படவும் கர்தினால்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்பு பூட்டிய அறையை விட்டு கர்தினால்கள் வெளியே வர அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆனால், தற்போது வாக்கெடுப்பு நடைபெறும் கிங்ஸ்ரைன் தேவாலயத்தை விட்டு மார்தா அரண்மனை ஹோட்டலில் ஓய்வெடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பு ஆரம்பிப்பதற்கு முன்னர் நேற்று நண்பகல் விசேட ஆராதனைகள் கிங்ஸ்ரைன் ஆலயத்தில் நடத்தப்பட்டன.

வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டவுடன் புதிய பாப்பரசரின் பெயர் வாக்குச் சீட்டில் எழுதப்படும்.

புதிய பாப்பரசரை தேர்ந்தெடுப்பதற்கு மூன்றில் இரு பங்கு வாக்குகள் பெறப்படவேண்டும். அவ்வாறில்லாவிட்டால் பெரும்பான்மையாக வாக்குப் பெற்ற ஒருவர் தேர்தெடுக்கப்படுவார். ஏகமனதாக ஒருவரை புதிய பாப்பரசராகத் தேர்தெடுப்பதற்கான வாய்ப்பும் காணப்படுகிறது.

மூன்றில் இரு பங்கினைப் பெறுவதற்கு 29 சுற்றுவரை வாக்குப் பதிவு நடைபெறும். புதிய பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயத்தை வெளியிலுள்ளவர்கள் அறிவதற்காக பூட்டிய அறையினுள் புகைக்கூண்டு வழியாக வெண்புகை வெளியேற்றப்படும். அவ்வாறு புதிய பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் புகைக்கூண்டு வழியே கரும்புகை வெளியேற்றப்படும்.

265ஆவது பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவருக்குப் பாப்பரசருக்குரிய ஆடை அணிவிக்கப்பட்டு, அங்குள்ள மாடி முகப்புக்கு அழைத்துவரப்படுவார். அவர் அவ்விடத்தில் நின்றபடி வெளியிலுள்ள பார்வையாளர்களுக்கு காட்சி கொடுப்பார்.

புதிய பாப்பரசர் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் வாக்குச்சீட்டுகள் உடனடியாக எரிக்கப்பட்டுவிடும். வாக்குகளை எண்ணவும் அவற்றைச் சரிபார்க்கவும், உதவி வழங்கவும் 9 கர்தினால்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

# இந்தியப் பிரதமர் - பாக். அதிபர் மூன்று கட்டங்களாகப் பேச்சு

புதுடில்லி, ஏப்.19

இந்தியாவுக்கு மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்ட பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் நடத்திய பேச்சுக்களில் நல்ல முடிவுகள் பல எடுக்கப்பட்டுள்ளன என இந்திய வெளிவிவகாரச் செயலர் தெரிவித்தார்.

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில் சந்தித்து பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் 3 கட்டப் பேச்சு நடத்தினர்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

முதற்கட்ட பேச்சுக்களில் இருநாட்டினதும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இந்தப் பேச்சு சுமார் ஒரு மணி 15 நிமிடங்கள் இடம்பெற்றது.

இரண்டாம் கட்டப் பேச்சின்போது இருநாட்டுத் தலைவர்களுடன் இரு நாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொண்டு பேச்சுக்கள் நடத்தினர்.

மூன்றாம் கட்டப் பேச்சின்போது உதவியாளர்கள் யாரும் இன்றி ஜனாதிபதி முஷாரப் பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் தனித்திருந்து சுமார் ஒருமணி நேரம் பேச்சு நடத்தினர்.

ஜனாதிபதி முஷாரப்பும், பிரதமர் மன்மோகன் சிங்கும் நடத்திய பேச்சின்போது இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள கோப்ரபார் மாகாணத்திற்கும், பாகிஸ்தானின் சிந்து மாகாணத்திற்குமிடையில் எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதியளவில் ரயில் போக்குவரத்து ஆரம்பித்தல் -

இருநாடுகளுக்கிடையில் வியாபார ஊக்குவிப்புக் கூட்டு வர்த்தக அமைப்பொன்றை நிறுவுதல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் பேசுகையில் -

காஷ்மீர் பிரச்சினை இருநாட்டுத் தலைவர்களினதும் அமைதிப் பேச்சுக்குத் தடையாக இருக்கக்கூடாது. சிக்கலான காஷ்மீர் பிரச்சினைக்குப் படிப்படியாகத் தீர்வைக் காணவேண்டும்.



இருநாடுகளினதும் எல்லையை மாற்றுவது என்ற பேச்சுக்கு இடமே இல்லை என பிரதமர் மன்மோகன் சிங் ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.

2004ஆம் ஆண்டு பாகிஸ்தான் மண்ணில் தீவிரவாதிகளுக்கு இடமில்லை என பாகிஸ்தான் ஜனாதிபதியின் உறுதிமொழியை நினைவுபடுத்திய பிரதமர், தீவிரவாதிகள் பெரியளவில் தாக்குதல் நடத்தினால் அமைதிப்பேச்சுக்கள் பாதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் எனக் கூறினார்.

இவர்களது பேச்சின்போது ஈரான், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையில் வாயுக்குழாய் அமைப்பது குறித்தும் பேசப்பட்டது.

இருநாட்டுத் தலைவர்களுக்கிடையிலான பேச்சு ஆக்கபூர்வமாகவும் தொலை நோக்குடையதாகவும் அமைந்திருந்தது.

தொழில்துறை மற்றும் உள்கட்டமைப்பிற்கு இருநாடுகளும் ஒத்துழைப்பது, நம்பிக்கையை வளர்ப்பது என்று தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

மேலும் இருநாடுகளும் கையெழுத்திட்ட இந்துஸ் நீர் ஒப்பந்தத்தை இந்தியா மதித்து நடக்கும் என்றும் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார் என்று இந்திய வெளிவிவகார செயலர் தெரிவித்தார். (ஐ-க)

# கொமோரஸ் தீவில் எரிமலை சீற்றம்

நைரோபி, ஏப்.19

இந்து சமுத்திரத்தின் மிகப்பெரிய தீவான கொமோரே:ஸ் தீவில் எரிமலையொன்று குமுற ஆரம்பித்துள்ளது என ஐ.நா. அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் குமுற ஆரம்பித்த இந்த எரிமலை நேற்றுமுதல் சாம்பலை வெளித்தள்ள ஆரம்பித்துள்ளதனால் நூற்றுக்கும் அதிகமான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனா என கொமோரஸ் ஐ.நா.குழுவின் உயரதிகாரி கியூசெபினா மாஸா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

எரிமலையின் சுற்றுப்புறத்தில் இருந்த மக்கள், பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். வாகனங்கள் அனைத்தும் உடனடியாக அகற்றப்பட்டுவிட்டன.

எரிமலையினால் வெளித்தள்ளப்பட்ட சாம்பல் காரணமாக பெரும்பாலான மக்கள் சுவாசிக்க முடியாது சிரமப்பட்டனர். ஆனால், எமது மருத்துவக்குழு சாமர்த்தியமாகவும், துரிதமாகவும் சிகிச்சை வழங்கியதனால் மக்கள் பாதுகாக்கப்பட்டனர். (ஐ-3)

# நேபாளத்தில் அகதிகளான மக்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கை மேற்கொள்வது அவசியம்

## ஐ.நா. அறிவிப்பு

காத்மண்டு, ஏப்.19

நேபாளத்தில் இடம்பெயர்ந்து அகதிகளாகத் தங்கியுள்ள மக்கள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

நேபாளத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுவருகின்றன. அதனைத் தடுக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என ஐ.நா. உயரதிகாரி டெனிஸ் மெக்மைரா தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் காணப்படும் நிலைமை குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

உள்நாட்டில் இடம்பெயர்ந்து அகதிகளாக தங்கியுள்ள மக்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படவேண்டும்.

ஐ.நா. சபை உதவி வழங்கும் நாடுகள் பட்டியலில் நேபாளத்தையும் இணைத்துக் கொள்ளவேண்டும்.

சூடான், கொலம்பியா, சோமாலியா ஆகிய நாடுகளில் நிலவும் நிலைமையே தற்போது நேபாளத்திலும் ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

அண்மையில் மாவோ தீவிரவாதிகளினால் 10 கிராமவாசிகள் கொலைசெய்யப்பட்டது தொடர்பாக கண்டனம் தெரிவித்த அவர், நேபாளத்தில் சுமார் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக தங்கியுள்ளனர். (ஐ-க)






# சுமாத்திரா தீவில் மீண்டும் இரு சக்திவாய்ந்த நில அதிர்வுகள்

ஹொங்கொங், ஏப்.19

இந்தோனேஷியாவின் அருகிலுள்ள சுமாத்திரா தீவில் நேற்று சக்திவாய்ந்த இரு நில அதிர்வுகள் ஏற்பட்டன என ஹொங்கொங் நில நடுக்க ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை உள்ளூர் நேரப்படி காலை 5.30 மற்றும் இரவு 9.30 ஆகிய நேரங்களில் ஏற்பட்ட இந்த நில அதிர்வு சுமாத்திராவின் மெடான் நகருக்கு தெற்கே சுமார் 590 கிலோமீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரிச்டர் அளவுகோளில் 5.7 புள்ளி, 5.5 புள்ளியாகப் பதிவாகியிருந்த இந்த நில அதிர்வுகளினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்த தகவல்கள் இன்னும் பெறப்படவில்லை என்றும்-

கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட நில அதிர்வின் பின்னர் சுமாத்திராத் தீவில் தொடர்ந்து நில அதிர்வுகள் ஏற்பட்டு வருகின்றன என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமையும் 6.1 ரிச்டர் புள்ளி அளவான சக்திவாய்ந்த நில அதிர்வு காரணமாக அச்சமடைந்த மக்கள் வீடுகளைவிட்டு திறந்தவெளிகளில் பொழுதைக் கழித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கட்டாக்காலி நாய் ஒழிப்புக்கு 'காஸ்' வாகனம் வசதியானது

## முன்னாள் பிரதிப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.19

கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தை உடனடியாகக் கட்டுப்படுத்த 'உயிர்கொல்லி வாயு' பொருத்தப்பட்ட வாகனத்தை உள்ளூராட்சி சபைகள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு முன்னாள் யாழ்.சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் க.தா.சிவபாதம் தெரிவித்தார்.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வி.கே.வர்ணநாதன் தலைமையில் சுகாதார அபிவிருத்தி சம்பந்தமான காலாண்டுக் கூட்டம் சங்கானையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே டாக்டர் க.தா. சிவபாதம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட வளர்ப்பு நாய் குடும்ப அட்டைத் திட்டம் ஊடாக கட்டாக்காலி நாய்கள் இனங்காணப்படக்கூடியதாகவும் - ஏனைய நாய்களை ஓர் ஒழுங்கு முறையின் ஊடாக ஊசி போடக்கூடியதாகவும் உள்ளது.

நாய்வளர்க்கும் ஒவ்வொரு குடும்பமும் ரூபா 50 செலுத்தி அட்டையைப் பெறுவதில் எவ்வித கஷ்டமும் இராது. எனவே, மக்கள் ஒவ்வொருவரும் இத்திட்டத்தினை உணர்ந்து செயற்படுத்த முன்வரவேண்டும் - என்றார்.

மானிப்பாய் சு.வை. அதிகாரி வி.கே. வர்ணநாதன் கூறுகையில்:

வளர்ப்பு நாய் குடும்ப அட்டை பெறுவதற்கான செலவு ரூபா 50 ஆகின்றது.

இந் நிலையில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு ஊசி போடும் தினத்தில் வலி.தென் மேற்கு பிரதேச சபையினால் வளர்ப்பு நாய் குடும்ப அட்டை வழங்கப்படுகின்றது.

இதனால், நாய்களுக்கு தடுப்பூசி போடும் தினத்தில் வளர்ப்பு நாய் அட்டைகளை பொது மக்களுக்கு வழங்காது -

பிறிதொரு தினத்தில் வழங்கினால் ஊசி போடுவதற்காக வருபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம் என்றார். (ஒ-185)


UNIT

இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்த காலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை வழங்கி வருகின்றோம். கணனித் துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு 3வருட முழு உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

கொழும்பு விலையில் — 3 வருட முழு உத்தரவாதம்

எமது சேவைகள் பல அவற்றுள் சில :

விற்பனை

- உலகத்தரம் வாய்ந்த பிரத்தியேக உதிரிபாகங்களை தெரிவு செய்து இணைத்து முழுக் கணனியாகவும் மற்றும் உதிரிகளாகவும் வழங்குதல்.
- கணனி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான Compaq, DELL, IBM மற்றும் HP நிறுவனங்களில் தயாரிப்புக்களை மிகமிகக் குறைந்த விலையில் தரம் மாறாமல் வழங்குதல்
- உலகத்தரம் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களான Perx & Asrock தயாரிப்புக்களின் ஏக விநியோகம்
- வலைப்பின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மிகமிகக் குறைந்த விலையில் வழங்குதல்

New Year Offer

நாங்கள் வழங்கும் ஒவ்வொரு கணனியுடனும்

Inkjet Printer/2400 DPI Scanner/ Computer Table/600VA UPS

மற்றும் Screen Filter, Mouse pad & Dust Cover Totally Free

Hybrid Boost, Hyper Thread, Dual Monitor

புதிய Multimedia Pentium IV கணனிகள்

மூன்று வருட உதிரிபாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

An Indian Engineer's Centre

We are entirely different from others

Universal Network of Information Technology

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna, Sri Lanka.



துள்ளிவரும் மெல்லிசையின் சங்கமத்தோடு
புதுப்பொலிவுடன் யாழ்.நகரிலே வளர்ந்து வரும்
இளங்கலைஞர்களோடு சங்கமிக்கிறார்கள்

மாதகல்

சப்தனாஸ் இசைக்குழுவினர்

தொடர்புகொள்ள வேண்டிய இடங்கள்:

நிதர்ஷன் தொலைத்தொடர்பு சேவை

பிரதான வீதி, மாதகல். (T.P.: 0602 213146)

செல்வம் சவுண்ஸ்

பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

(44397)(26-11-17-42)


## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு குலேந்திரன் (இராசா)

(நெடுந்தீவு பிரதேசசபை ஓய்வுபெற்ற பணியாளர்)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கூழாவடி, ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு குலேந்திரன் 17.04.2005 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - நாகரட்ணம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் கனகாம்பிகை ஆகியோரின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கார்த்திக் (தினேஷ், உலக உணவு ஸ்தாபனம், கிளிநொச்சி), சுஜீந்திரன் (மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி - வட்டுக்கோட்டை), ஹேமமாதவன் (மாணவன், மானிப்பாய் இந்துக் கல்லூரி), கார்த்திகா (மாணவி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற யோகேந்திரன் (பொறியியலாளர், சவூதி அரேபியா) மற்றும் சரோஜினிதேவி, ருகமணிதேவி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுலோஜனா (இந்தியா), திருநாவுக்கரசு, சிவானந்தன் (சவூதிஅரேபியா), பாலசுப்பிரமணியம், இராஜேஸ்வரி, சந்திரபாலன், இராமச்சந்திரன், இராசலெட்சுமி, கனகலெட்சுமி, விஜயலெட்சுமி ஆகியோரின் மைத்துனரும் யோகினி (இந்தியா), சுதர்சன் (நோர்வே), சுதாகரன், தனுஜா (அமெரிக்கா) ஆகியோரின் சிறிய தந்தையாரும் நிமலன் (கனடா), விமல் (லண்டன்), சுதர்சினி, சுவேந்தினி (உமா - லண்டன்), சுகந்தினி (சுவிஸ்), தர்மேந்தினி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (20.04.2005) புதன்கிழமை காலை 8 மணிக்கு அவரது (ஆனைக்கோட்டை) இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நெடுந்தீவு கட்டிருஞ்சல்லி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

*அரசடி வீதி,*
*கூழாவடி,*
*ஆனைக்கோட்டை.*
*தொலைபேசி:* 021 222 7450

தகவல்:
கு. சரஸ்வதி
(மனைவி)
(சு.42373) (42-11-17)

# 2 ஆவது பிறந்ததின வாழ்த்து



19 - 04 - 2005

சிவலோகநாதன் சசிகலா தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி ஆரணி (ARANI)

தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (19.04.2005) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியிலுள்ள (Wuppertal) அவரது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி ஆரணிக்குட்டியை அம்மப்பா சின்னத்துரை, அம்மம்மா இராஜேஸ்வரி, பாட்டிமார்கள் வள்ளிப்பிள்ளை, சின்னப்பிள்ளை, மாமன்மார்கள் கரன் (LONDON), துளசி (M.T.S travels Colombo), சித்தி நளாயினி மற்றும் M.T.S இராமச்சந்திரன் அம்மப்பா குடும்பம், (GERMANY) சித்தப்பா நாதன் (LONDON), மாமா சசி, அத்தை துவாரகா, பெரியப்பாமார்களான மகான் குடும்பம், தேவன் குடும்பம், மயூரன் மாமா (GERMANY) மற்றும் அம்மப்பாமார், அம்மம்மாமார், சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், உறவினர்கள் அனைவரும் சிட்டிவேரம் கண்ணகை அம்மன் அருளால் சகல கலைகளும் கற்று பல்லாண்டுகாலம் நலத்துடன் வாழவேண்டும் என்று மனமார வாழ்த்துகிறார்கள்.

ஆரணி

பருத்தித்துறை வீதி,
குடமியன், வரணி.
108, செட்டித் தெரு,
கொழும்பு - 11.

தகவல் :
M.S.துளசி (மாமா).
(0714 871 396)
(C-41368)
(53-11-18-17)

## கல்வியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா

வலிகாமம்,ஏப்.19

தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2000ஆம் ஆண்டுப் பிரிவில் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்வி கற்று டிப்ளோமா பரீட்சையில் சித்தியடைந்து சான்றிதழ் பெற்ற ஆசிரிய மாணவர்களுக்கான பட்டமளிப்பு அன்றையதினம் இடம்பெறும் என கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கான பிரதம ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இப்பட்டமளிப்புக்காக 2000ஆம் ஆண்டு பிரிவுச் சான்றிதழ்களைப் பெற்ற ஆசிரிய மாணவர்கள் தத்தமது கல்லூரிப் பீடாதிபதிகளுடன் தொடர்புகொண்டு உரிய ஆயத்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பிரதம ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(த-152)

## தென்மராட்சியில் பாம்புக்கடி அதிகம்

தென்மராட்சி,ஏப்.19

அண்மையில் பெய்த மழையினையடுத்து, தென்மராட்சியில் பாம்புக்கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கடந்த 16 ஆம் திகதி இரவு பாம்பினால் கடியுண்ட இருவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வரணி நாவற்காட்டைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை முத்துலிங்கம் (வயது 45), கொடிகாமம் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி இலட்சுமிப்பிள்ளை (வயது 54) ஆகியோரே பாம்பினால் கடியுண்டவர்களாவர்.

இவர்களில் க.முத்துலிங்கம் என்பவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டார். இதற்கு முன்னரும்பல பாம்புக்கடிக்கு இலக்கான சம்பவங்கள் பல இப்பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு விஷஜந்து ஒன்றினால் கடியுண்ட மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கந்தையா மகாலிங்கம் (வயது 52) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-117)

## இலங்கையில் சிசு மரணம் ஒரு வருடத்துக்கு 4,420

இலங்கையில் ஆண்டொன்றுக்கு 4 ஆயிரத்து 420 சிசு மரணங்கள் இடம்பெறுவதாகவும் ஆண்டொன்றுக்கு சுமார் 200 கர்ப்பிணித் தாய்மார் இறக்கின்றனர் எனவும் சுகாதார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு லட்சம் கர்ப்பிணிப்பெண்களில் சராசரியாக 50 கர்ப்பிணிப் பெண்கள் மரணமடைகின்றனர். ஆயிரம் சிசுக்களில் சராசரியாக 13 சிசுக்கள் மரணமடைகின்றன.

ஆண்டொன்றுக்கு சுமார் 3 லட்சத்து 50 ஆயிரம் பெண்கள் கர்ப்பமுறுகின்றனர் எனவும் சுமார் 3 லட்சத்து 45 ஆயிரம் குழந்தைகள் பிறககின்றன எனவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## University of Jaffna, SriLanka

### Faculty of Medicine

Date of Commencement of 2nd Term of the Academic year 2004/2005

The 2nd Term of the Academic year 2004/2005 for the medical students has been postponed to 25th April 2005 instead of 18th April 2005.

The 3rd MBBS Course for the 25th and 26th Batches of medical students will also commence on 25th April 2005.

**Registrar,**
University of Jaffna.

(C/42374)(42-11-17)

## சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 08.05.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் தலைவர் P.சங்கர் தலைமையில் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

1. மௌன வணக்கம்
2. தலைமை உரை
3. போசகர் உரை
4. செயலாளர் அறிக்கை
5. செயலாளர் செயற்பாட்டறிக்கை
6. பொருளாளர் அறிக்கை
7. பிரேரணைகள் (இருப்பின்)
8. உத்தியோகத்தர் தெரிவு
9. இதர விடயங்கள்

அனைத்து அங்கத்தவர்களும் உரிய நேரத்தில் கூட்டத்தை ஆரம்பிக்க வருகை தந்துதவுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்,
யாழ்ப்பாணம்.
(44385)(32-11-17-42)

K.யோகேஸ்வரன்,
பொதுச் செயலாளர்.

## இரண்டாம் ஆண்டு நினைவில்...

*தோற்றம்* 15 — 01 — 1944



*மறைவு* 19 — 04 — 2003

### திருமதி சிவநாயகி கந்தசாமி (கிளி)

(செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு)

திதி: 26.04.2005

தாயிற் சிறந்த கோயிலுமில்லை என்பதை
தரணியில் எமக்குணர்த்திய தெய்வமே!
ஆண்டுகள் இரண்டு ஆன போதிலும்
ஆறவில்லையே எம்மனது!

தற்காலிக முகவரி:
*சின்னப்புதுக்குளம்,*
*வவுனியா.*
(44399)(42-11-17)

உன்நினைவுடன்:
குடும்பத்தினர்,
க.சிவகந்தரூபன் (மகன்).

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது



தாவழமைந்தன் ஜெய்ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடித்த **குருதேவா** (ரீல்ஸ்)

கா.நேரம் 10.30, 2.30

6.30, 9.30 விஜய், ரீமாசென் நடித்த **பகவதி**

21.04.05 முதல் **தகஜதிமிதா**

(C/41396)(22-11-45)

**மனோகரா** யாழ்ப்பாணம்

விஜய், ஹரினி, வடிவேல் நடித்த

**சச்சின்**



காட்சி நேரம்: 10.30 a.m., 2.30. p.m., 6.30p.m., 9.30 p.m.

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு கமலஹாசன், மனீஷா கொய்ராலா, நாசர் நடிக்க

**மும்பை X பிரஸ்** (ரீல்ஸ்)



காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ரீக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(C/41381)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

ரஜினி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசா நடித்த



காட்சிகள் 11.00. 3.0 7.00 (பு.நே)

விசேட காட்சிகள்: 10.00. 1.00. (பு.நே.)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

ரிராஸ்லா, அலு. வடிவேல் நடித்த **கிருதில் டயட் கம்** (ரீல்ஸ்)

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

21.04.05 முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு ஜெய்ஆகாஷ், ராஜ்கிரண், செந்தில் நடித்த **செவ்வேள்**

கா.நே.: 11.00, 2.45, 6.30, 9.30 (பு.நே)

(C/41377)(28-14-17)


# EMPLOYMENT OPPORTUNITIES

*World vision is* an International Christian humanitarian, relief and development agency looking for suitable qualified candidates for the positions of,

World Vision

**Health & Nutrition Officers**

To work with the health/Nutrition Coordinators in the implementation of the health and nutrition program in districts in SriLanka.

**Job Locations: Mullaithievu & Jaffna**

**Personal Profile:** Requires a Degree in Medicine, Health/Nutrition. Ability to foresee potential problems related to program operations (health & nutrition) and find solutions without needing direct guidance from Health/Nutrition Coordinators.

**District Civil Engineers**

The district engineer will be deployed to work with district teams and local government to identify, implement, monitor and evaluate the water & sanitation needs/projects.

**Job Locations: Mullaithievu & Jaffna**

**Personal Profile:** Must possess a Degree in Civil Engineering/Public Health Engineering/ Environmental Science/Water Supply and sanitation and have 3-5years' experience in the development and relief arena, preferably within International NGO and AID agencies. Experience in project design, implementation, monitoring, evaluation and report writing. Good interpersonal skills and cross-cultural sensitivity. Able to speak and write with a high standard of English and local language.

**Post of Economic Recovery Project District Coordinator**

The purpose of this position is to provide operational management of micro economic recovery projects through a team of nine district officers. It's key roles will be in managing the various grants, overseeing their implementation and ensuring that maximum job creation and economic recovery is achieved. The scale of each of these projects will be at the community level or micro economic level.

**Job Locations:** Jaffna & Mullaithievu

Personal Profile:

* Post graduate Diploma level or bachelor level of academic study.
* A minimum of 2 years in a micro economic development role.
* Hands –on experience establishing and managing one or more micro economic recovery projects.
* A strategic, clear and conceptual thinker who can convert concepts and ideas into operational terms.
* Communication skills and organizational skills essential;
* Facilitation/training skills;
* Good knowledge of English. Knowledge of Singhalese or Tamil would be an advantage;
* Working experience in SriLanka will be an advantage; and
* Ability to work in a team and willingness to undertake extensive travel throughout the country.

World vision Lanka Offers attractive remuneration package, based on individual competence and skills.

Period of contract for all positions: 12 months period with a possible extension.

If you are a person who meets the above requirements and is willing to work with the people of SriLanka, sometimes in difficult conditions. Please apply with in three(3) days of this advertisement with your bio-data and names and addresses of three non-related referees to;

**Zonal Manager – North**
**World Vision Lanka,**
**227, 3rd, Cross Street, Jaffna.**

Kindly mark the post & Location applied for, on the left hand corner of the envelope.

**All offers of employment are made contingent upon the successful completion of all applicable background checks, including criminal record checks.**

**World Vision is committed to the protection of children and does not employ staff whose background is not suitable for working with children.**

(C/42384)

## வெவ்வேறு விபத்துகளில் மூவர் படுகாயம்!

வெவ்வேறு இடங்களில் நேற்று இடம்பெற்ற விபத்துச் சம்பவங்களில் மூவர் படுகாயமடைந்தனர்.

கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் - ஹை-ஏஸ் வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்று மதியம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நல்லூர், முத்திரைச் சந்தையடியைச் சேர்ந்த கோபிநாத் (வயது19) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பரமேஸ்வராச் சந்திப்பகுதியில் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

மேற்படி விபத்துக்களில் காயமடைந்த இருவரும் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -

கிளிநொச்சி காக்கா கடையடிச் சந்திப்பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் கால் முறிந்து படுகாயமடைந்தார்.

இச்சம்பவத்தில் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தானைச் சேர்ந்த லெட்சுமிகாந்தன் சதீஸ்கரன் (வயது-25) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் உடனடியாகக் கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, நேற்று நண்பகல் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டார். (8-12)

## மாணவன் காயம்

குரங்கு துரத்தித் தாக்கியபோது ஓடிய மாணவன் மரக்குற்றியுடன் மோதிக் காயமடைந்த சம்பவம் கடந்த 17ஆம் திகதி சாவகச்சேரி கல்வயலில் இடம்பெற்றுள்ளது. தனியார கல்வி நிலையத்திற்குச் சென்று திரும்புகையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த க.சதீஸ்வரா (வயது-14) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (8-117)



## ஏகாதசித் தீர்த்தம்
## ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம்
### நாகேஸ்வரம் -அளவெட்டி

மேற்படி விழா நாளை (20.04.2005) புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி, காலை 10.00 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும் தொடர்ந்து தீர்த்தமும் இடம்பெறும் என்பதை அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பொ.ப.சபை
அளவெட்டி நாகேஸ்வரம்

(44413)(29-14-45)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் நாகராசா (ராதா)



கீரிமலை - நகுலேஸ்வரா வீதியை நிரந்தர வசிப்பிடமாகவும் வைரவப் புளியங்குளம் -வவுனியா, மாதர்சங்க ஒழுங்கை - சித்தன்கேணி ஆகிய இடங்களைத் தற்காலிக வதிவிடங்களாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகராசா (ராதா) நேற்று (18.04.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் -இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசேந்திரம் (அண்ணையர்), குணரத்தினம் (கிளியண்ணை), தேவராசா, இராசேஸ்வரி, இராசரத்தினம் (லண்டன்), கஜேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவராசா - கணேசலிங்கம் (திருவரங்கம் சைவ ஹோட்டல், வெள்ளவத்தை), சுலோசனாதேவி (லண்டன்), ராதாகிருஷ்ணன் - சற்குணலிங்கம் (குமார், வவுனியா), தியாகலிங்கம் (கனடா), லதாதேவி - அருள்லிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2005) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மாதர் சங்க ஒழுங்கை, சித்தன்கேணியிலுள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*மாதர்சங்க ஒழுங்கை, சித்தன்கேணி.* சு.குணரத்தினம் (கிளியண்ணை).

(44414)(29-14-45)

## வீரகத்தி குலாஆனந்தன் (ராசா -நயினாதீவு)

**(சிரேஷ்ட திடீர் பரிசோதகர், வ.பி.போக்குவரத்துச்சபை, கோண்டாவில்)**



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி குலாஆனந்தன் 16.04.2005 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி (அதிபர்), நேசலட்சுமி (Australia) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை -சௌந்தரம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற யோகேஸ்வரியின் (ராசாத்தி) அன்புக் கணவரும் கஜநீதன் (2005 வர்த்தகம், யாழ்.மத்திய கல்லூரி), திருமதி சஜானந்தி, தவராசா, குஜாயினி, துஷாந்தினி (மாணவிகள், யாழ்.இந்து மகளிர் கல்லூரி), சிஜானந்தன், டஜந்தன் (மாணவர்கள், யாழ்.மத்திய கல்லூரி), மோஜனன் (கொட்டடி நமசிவாய வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவராசாவின் மாமனாரும் லக்ஷனாவின் பேரனும் கேசவஆனந்தன் (Norway), கோணேஸ்வரி (Australia) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரஞ்சி (Norway), சிவகுமார் (Australia), துரைரத்தினம், கணேசரெத்தினம், திகம்பரேஸ்வரி, ஞானேஸ்வரி, காலஞ்சென்ற நவநீதரெத்தினம், சடாட்சரமணி (சுவிஸ்), விக்னேஸ்வரி (UNICEF, யாழ்.) ஆகியோரின் மைத்துனரும கோபாலகிருஷ்ணன்(J.P.), சீவரெத்தினம், செல்வரெத்தினம் (சுவிஸ்), கங்கநாதன் (சாயி வீடியோ), உமாதேவி, கனகேஸ்வரி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2005) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்.வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*30/4, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.* கு.கஜநீதன் (மகன்), நா.கோபாலகிருஷ்ணன் (சகலன்).

(44412)

## திருமதி இரத்தினேஸ்வரி இராமச்சந்திரன்

**(பொறுப்பாளர் - குருபாபா ஆச்சிரமம், ஆசிரியை - உடுப்பிட்டி அ.மி.ஆண்/பெண் பாடசாலை, தமிழ் மகா வித்தியாலயம், வவுனியா)**



கெருடாவில் தெற்கு, தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், பாங்சால் வீதியை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியாவில் வசித்து வந்தவருமான திருமதி இரத்தினேஸ்வரி இராமச்சந்திரன் அவர்கள் 17.04.2005 ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கெருடாவில் முன்னாள் விதானையார் ஐயாத்துரையினதும் அன்னமுத்தம்மாவினதும் பாசமிகு மகளும் சட்டத்தரணி இராமச்சந்திரன் அவர்களின் அன்பு மனைவியும் Dr.அருள்நாதன் (இந்தியா) அவர்களின் அன்புத் தாயாரும் Dr.அன்பரசி (இந்தியா) அவர்களின் அன்பு மாமியாரும் விவேக், வித்தியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற ஆசிரியர் சென்பிறிச்சேட், ஞான இரத்தினஅம்மாள், காலஞ்சென்ற ஆசிரியர் கமலாச்சி அம்மாள் (சைவப்பிரகாச வித்தியாலயம், கெருடாவில்), இராசதுரை (முன்னாள் பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), காலஞ்சென்ற பத்மாவதி அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, தம்பியையா மற்றும் சந்திராதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் மற்றும் கமலநாதன் (கனடா), தம்பிநாதன் (கனடா), கமலேஸ்வரி (கனடா), ஞானக்குமார் (கொழும்பு), ஞானேஸ்வரி (யாழ்.சென்.றோக் ஆசிரியர்) ஆகியோரின் அன்புப் பெரியதாயாரும் ஈசன் (கொழும்பு), வாசுகி (இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி), காலஞ்சென்ற ஜெகன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.04.2005) திங்கட்கிழமை இந்தியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

க.சிவகுமாரன் (மருமகன்).
*117/2, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

தகவல்:
Dr.அருள்நாதன் (மகன் - இந்தியா),
கமலநாதன் (பேறாமகன் - கனடா).

(44405)(29-11-34)




# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

வதிரி வீதி, உடுப்பிட்டியில் இணை ஸ்தாபனமாக
நாளை (20.04.2005) புதன்கிழமை காலை 8.30 மணி முதல்
10 மணி வரை உள்ள சுபவேளையில் எம்மால்



**நிரஞ்சன் நகைமாடம்**

குறித்த தவணையில் 22 கரட்டில் ஓடர் நகைகளைச் செய்து பெற்றிடவும்

**நிரஞ்சன் வீடியோ சென்ரர்**

VCD, ஓடியோ CD, MP3 ஓடியோ கசற், வீடியோக் கசற், VCD கசற்களை ஒலிப்பதிவு செய்யவும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும்

உடுப்பிட்டியில் உதயமாகின்றது
**நிரஞ்சன் நகைமாடம் & வீடியோ சென்ரர்**
வதிரி வீதி, உடுப்பிட்டி. T.P.: 077 6154100

எம்மால் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த ஸ்தாபனத்தின் ஆரம்ப நிகழ்வில் எமது வர்த்தக முகங்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்து மங்களகரமாக ஆரம்பித்து வைக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

-உரிமையாளர்.

(44411)(29-14-45)

### சமாதானச் சூழலைச் சீர்குலைக்கும்

# அரச படைகளின் செயற்பாடுகளை சர்வதேச சமூகத்திடம் விளக்கினோம்

## பி.பி.ஸி. செவ்வியில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

சமாதானச் சூழலைச் சீர்குலைக்கும் அரச படைகளின் செயற்பாடுகளைச் சர்வதேச சமூகத்துக்கு விளக்கியுள்ளோம்.

- இவ்வாறு நேற்று பி.பி.ஸி. தமிழோசைக்கு அளித்த பேட்டியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஐரோப்பிய மற்றும் தென்னாபிரிக்க விஜயம் பற்றிக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய நிலையில் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தினுடைய நிலைப்பாடுகளைச் சர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்தியுள்ளோம். ஆழிப்பேரலையால் எமது மக்கள் ஒரு பேரழிவைச் சந்தித்துள்ள நிலையில், அவர்களுக்கு உதவ சர்வதேச சமூகத்தின் உதவிகளைப் பெறும் நோக்கோடு நாம் இந்த விஜயத்தை மேற்கொண்டோம்.

இந்த உதவிகளைத் தமிழர் தாயகப் பகுதிகளுக்குப் பகிர்ந்துகொள்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, இலங்கை அரசின் ஒத்துழைப்பின்மை சம்பந்தமாக நாம் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளுக்கு விளக்கியுள்ளோம்.

அத்துடன், தென் தமிழீழப் பகுதிகளிலே எமது பொறுப்பாளர்கள், போராளிகள் மீதான படுகொலை முயற்சிகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. எனவே, இந்த யுத்தநிறுத்த சூழல் பாதிப்படையாமல் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்க சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமெனவும் நாம் கோரியிருந்தோம்.

ஒரு தரப்புத் தகவல்கள்தான் இதுவரை சர்வதேச சமூகத்துக்குக் கிடைத்துள்ளன. நாம் இப்போது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் எமது தலைமைப் பீடத்தின் நிலைப்பாட்டை நேரடியாக அவர்களுடன் பகிர்ந்துகொண்டோம். ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கட்டமைப்பு உருவானால் அதில் நிச்சயமாக முஸ்லிம்களும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். நோர்வே அனுசரணையாளர்களிடம் நாம் கொடுத்த ஆலோசனை வரைபில் இதனை வலியுறுத்தியுள்ளோம்.

அப்படியான ஒரு கட்டமைப்பு நிறுவப்படும்போது முஸ்லிம் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். இதன் மூலம் அவர்களுக்கான உதவிகள் சரியான முறையில் பகிரப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்கனவே தெரிவித்திருந்தோம் - என்றார். (ஒ-8)

## பொதுக்கட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தும் முயற்சியாக நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்ம், கொழும்பில் வந்து தங்கியிருக்கும் இந்தச் சமயத்திலேயே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் நேற்று மதியுரைஞர் பாலசிங்கத்துடன் தொலைபேசியில் உரையாடினார்.

இந்தத் தொலைபேசி உரையாடல் குறித்து மதியுரைஞர் பாலா நேற்று உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

"பொதுக்கட்டமைப்பில் இணக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒரு திருத்தத்தைத் தாங்கள் சமர்ப்பிக்கின்றார்கள் என்று பீற்றர்ஸன் என்னிடம் தெரிவித்தார்.

"அந்தத் திருத்தம் இணக்கம் ஏற்படுவதற்கு வழிசெய்யுமானால் நல்லது. அப்படி அது உங்களால் ஏற்றுக்கொள்ளமுடியாது என நீங்கள் கருதினால் அதனை அப்படியே தவிர்த்து விடுங்கள் என்றும் அவர் என்னிடம் கூறினார்.

"சர்ச்சைக்குரிய விடயத்தில் இணக்கம் எட்டப்படாவிட்டால் அந்த விவகாரத்தை பொதுக் கட்டமைப்பு ஆவணத்தில் தவிர்த்துக்கொண்டு ஓர் இணக்கத்துக்கு வர முயற்சியுங்கள் என்றும் அவர் கூறினார்.

"இது விடயத்தில் இயன்றளவுக்கு விட்டுக்கொடுத்து - நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடித்து - விரைந்து ஓர் இணக்கத்துக்கு வரவும் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை ஒப்பேற்றவும் முயற்சிக்குமாறு அவர் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

"ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்கு உதவுவதற்காகச் சர்வதேச சமூகம் - உதவும் நாடுகள் அமைப்பு - காத்து நிற்கின்றது. இலங்கை அரசு மீதும் அது அழுத்தம் கொடுத் துள்ளது. பொதுக்கட்டமைப்பு இணக்கத்துக்கு வராமல் இந்த நிதி கிடைக்கவேமாட்டாது என்றும் பீற்றர்ஸன் என்னிடம் கூறினார்.

"இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதற்குப் புலிகள் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்துள்ளனர். எதிர்காலத்திலும் செய்யச் சித்தமாகவுமுள்ளனர் என்பதை நான் அவருக்கு எடுத்துரைத்தேன்.

"எமது அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தாயகம் திரும்பி, எமது தலைவருடன் கலந்துரையாடிய பின்னர் தீர்க்கமான முடிவுகளை வெளியிடுவார் என்பதையும் நான் அவருக்கு எடுத்துரைத்தேன்" - என்றார் அன்ரன் பாலசிங்கம். (க)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படவில்லை. இருப்பினும் இது ஒரு யுத்தநிறுத் மீறலாகும். இதுகுறித்து நாம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளோம் என எழிலன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

திருகோணமலை மஹிந்தபுர இராணுவ முகாம் மீது புலி உறுப்பினர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்றும், இதனால் சேதம் ஏதும் ஏற்படவில்லையெனவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தாம் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனவும் இராணுவத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (க)

## கதிர்காமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்புக்குறித்துக் கருத்து வெளியிட்ட அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால பொதுவான விடயங்களே இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டன எனக் கூறினார்.

இதேவேளை -

அமைச்சர் கதிர்காமரை அவரது இல்லத்தில் சந்தித்த எரிக்சொல்ஹெய்ம், பொதுக் கட்டமைப்பு உருவாக்கும் விடயத்தில் நோர்வே மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை அமைச்சரிடம் விவரித்தார். இந்தப் பொதுக் கட்டமைப்புத் தொடரில் அரசு அக்கறையுடன் செயற்படுவதாக அமைச்சர் அப்போது தெரிவித்தார் என அறியவந்தது.

இதேசமயம், இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரைச் சந்தித்த போது, கிழக்கு மாகாணத்தில் நிலவும் அமைதியற்ற நிலைமை குறித்து கண்காணிப்புக் குழுத் தலைவரால் எரிக்சொல்ஹெய்மிற்கு விளக்கப்பட்டது எனத் தெரியவந்தது.

நேற்றுப் பிற்பகல் நோர்வேத் தூதரகத்தில் அரசசார்பற்றநிறுவனங்களின் முக்கிய பிரதிநிதி களையும் சொல்ஹெய்ம் சந்தித்தார். (க)

## தமிழர் தாயக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டத்துக்கு வேலணை கிழக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் முன்றிலினும்-

தென்மராட்சிக் கோட்டத்துக்கு சங்கத்தானை மாவடிப் பிள்ளையார் கோயில் முன்றிலினும்.

வடமராட்சிக் கோட்டத்துக்கு அல்வாய் முத்துமாரி அம்மன் கோயில் முன்றிலினும் - அடையாள உண்ணா நோன்பு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

அனைத்து இடங்களிலும் காலை 9 மணிக்குப் பொதுச்சுடர் ஏற்றலுடன் ஆரம்பமாகும் நிகழ்வுகளில் தேசியக்கொடியேற்றல், அன்னை பூபதிக்கு மலரஞ்சலி செலுத்தல், ஈகச்சுடரேற்றல், சிறப்புரைகள் ஆகியன இடம் பெறவுள்ளன. இரவு நிகழ்ச்சிகளில் எழுச்சிக்கலை நிகழ்வுகள் நடைபெறும். (ஒ-3)

## ஆளும் கூட்டமைப்பின் தலைவர்கள் சந்திப்பு

அரசில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுக்கான விசேட கூட்டமொன்று நாளை புதனகிழமை காலை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் வாழ்க்கைச் செலவு வீதத்தைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் போன்றவை குறித்து ஆராய்வதற்காகவே இந்தக் கூட்டம் நடத்தப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக இதேபோன்ற கூட்டம் ஒன்று கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இவ்வாறான கூட்டங்கள், சந்திப்புக்கள் போன்றவற்றை நடத்துவதன் மூலம் அரசு எதிர்நோக்கும் சவாலகளை முறியடிக்க முடியுமென்று அமைச்சரொருவர் தெரிவித்தார்.

## தமிழ்ச்செல்வன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதியான எரிக்சொல்ஹெய்ம் ஹோட்டலில் வைத்துத் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து உரையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தச் சந்திப்பை முடித்துக்கொண்டு கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து தமிழ்ச்செல்வன் குழுவினர் விசேட ஹெலிக்கொப்டரில் கிளிநொச்சிக்குப் புறப்பட்டுச்செல்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சபைக்கான உறுப்பினர்கள் அரசியல் கட்சிகளைச் சாராதவர்களாக இருக்க வேண்டும். ஏற்கனவே வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பிரகாரம், விண்ணப்பித்தவர்களில் இருந்து தகுதியானவர்களை நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்வோம். அவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படும்.


பெரும்பாலும் ஒரு மாத காலத்துக்குப் பின்னர் முதல் கட்டமாக ஐந்து சபைகள் இயக்க ஆரம்பிக்கும் என நம்புகிறேன் - என்றார் அவர். (ஒ-3-13)

நாதஸ்வர, தவில் கச்சேரி
மாதகல், நுணசை
அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோயில்
வருடாந்த மஹோற்சவ 8ஆம் திருவிழா நிகழ்ச்சியாகச் சிறப்பு நாதஸ்வர, தவில் கச்சேரி இடம்பெறும்.
காலம்: நாளை (20-04-2005) புதன்கிழமை
நேரம்: மாலை 6.00 மணியளவில்



நாதஸ்வரம்
கோண்டாவில் நாதஸ்வர இசையருவி **V.K.** பஞ்சமூர்த்தி அவர்களும்
சாவகச்சேரி இன்குழல் வேந்தன் **M.P.**நாகேந்திரன் இவர்களுடன்
கோண்டாவில், லயஞானபாலதீரன் **K.P.** குமரேஸ் இவர்களின் நாதஸ்வரத்திற்கு

தவில்
சிறப்புத் தவில் வித்துவான்களாக
இந்தியா, தமிழ்நாடு, திருப்புன்கூர் கலைமாமணி **T.G.**முத்துக்குமாரசாமி
இவர்களுடன் மறைந்த தவில் சக்கரவர்த்தி அளவெட்டி
லயஞான குபேரபூபதி **V.**தெட்ஷணாமூர்த்தியின் புதல்வன் **T.**உதயசங்கரும்
மறைந்த தவில் மேதை இணுவில் விவகார வித்வமணி **N.R.**சின்னராசாவின் மகன் **R.S.**சுதாகரனும்



மாலை 4.00 மணியளவில் முருகப்பெருமானின் வேட்டைத் திருவிழாவின்போது வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவினர் அளிக்கும் கிராமியக் கலைகளான குதிரை ஆட்டம், கரகாட்டம், அனுமான் ஆட்டம், பொம்மலாட்டம் ஆகியன இடம்பெறும்.
அடியார்கள் அனைவரும் வருக! அறுமுகன் அருள் பெறுக!!
திரு. கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
8ஆம் திருவிழா உபயகாரர், ஆலய தர்மகர்த்தா.
மு. நடராஜகுமாரன்,
நுணசை, மாதகல். (44310)(29-14-45)

நாளை ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
பிரிவு - 4
O/L DAY CLASS
ஆரம்பம்: 20.04.2005 8.30-2.30
★ பிரிவு 4 அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
★ பிரிவு 5 மிக விரைவில்.
★ தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி செய்துதரப்படும். (44117)(29-14-45)
★ இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டுமே.

திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
A/L 2006, 2007
புதிய கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்: 20.04.2005 4p.m.

| | |
|---|---|
| தமிழ் | M.சுரேஸ் |
| புவியியல் | S.கிருஸ்ணா |
| இந்துநாகரீகம் | S.சுரேஸ் |
| நாடகமும் அரங். | I. சத்தியா |
| அரசறிவியல் | T.திருமுருகன் |
| கணக்கீடு | K.S.மோதிலால் |
| வணிகக்கல்வி | K.சாந்திநாதன் |
| பொருளியல் | P.சண் |

(44387)(29-14-45)
Note: ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
O/L DAY CLASS நடைபெறுகின்றன

சமய சந்தர்ப்பங்கள் எப்போதும் கிட்டுவதில்லை
UNIT
விபரம் 14ம் பக்கம் பார்க்கவும்

## மரண அறிவித்தல்

### திருமதி இராமநாதன் காமாட்சி

(நன்னி - காமாட்சி)

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் காமாட்சி அவர்கள் நேற்று (18.04.2005) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதனின் அன்பு மனைவியும் தவமணி, தியாகராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.04.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகச் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.தியாகராசா (மகன்).
வாரிவளவு, காரைநகர். (29-14-45)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.